10.7.2023
திங்கட் கிழமை

*சாஸ்த்திர விசேஷண விசேஷ்யத்தை சரிவர க்ரஹிக்காத போது வரும் ப்ரத்யவாயங்கள் - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்*

1. தர்மி என்பது ***விசேஷ்யம்*** ; தர்மம் ***விசேஷணம்***

உதாரணம் :  நீல நிறக் குடம் ; இதில்,

குடம் : ***விசேஷ்யம்*** ( தர்மி )

நீல நிறம் : ***விசேஷணம்*** ( தர்மம் )

ஆக, ***விசேஷ்யமான*** தர்மி வஸ்துவைக் குறிக்கும் ; ***விசேஷணமான*** தர்மம் விசேஷ்யத்தின் தன்மையைக் குறிக்கும்.

மற்ற உதாரணங்கள் :

மணமுள்ள மலர், சுவையுள்ள பழம், வேகமாக ஓடும் வண்டி, உயர்ந்த மரம் போன்றவை.

இவைகளில், மணம், சுவை, வேகமாக ஓடுவது, உயர்ந்திருப்பது ஆகியவை ***விசேஷணங்கள்*** ;

மலர், பழம், வண்டி, மரம் ஆகியவை ***விசேஷ்யங்கள்*** .

ஆக, ***விசேஷணமாவது*** (தர்மமாவது), ***விசேஷ்யத்தை*** (தர்மியை) விளக்க வருகிற குணமாகவோ செயல்களாகவோ மற்ற தன்மைகளாகவோ  இருக்கும்.

2. இந்த விசேஷணமான தர்மமானது இரு வகைப் படுகிறது ;

# ***விசேஷ்யத்தை*** ( தர்மியை ) நிரூபிக்க உதவும் ***விசேஷணம்*** ( தர்மம் ) - அதாவது ***ஸ்வரூப நிரூபக தர்மம்***

உதாரணமாக,

குரைக்கும் தன்மை கொண்டது நாய்.

இதில் குரைக்கும் தன்மை தர்மியை நிரூபிக்க உதவும் ***விசேஷணம்*** ( தர்மம் )

குரைக்கும் தன்மை வேறு எந்த ப்ராணியிடமும் கிடையாது ; அதிவ்யாப்தி க்டையாது ; ஆக, இந்த தன்மை தர்மியான நாய்க்கு ***ஸ்வரூப நிரூபக தர்மம்*** எனலாம்.

# தன் அசாதாரண தன்மைகளால் நீரூபிக்கப் பெற்ற ***விசேஷ்யத்துக்கு*** ( தர்மிக்கு ) உள்ள மற்ற தன்மைகள், ***விசேஷணம்*** ( தர்மம் ) - அதாவது ***நிரூவித ஸ்வரூப விசேஷணம்***

உதாரணமாக,

நான்கு கால்கள் கொண்டது நாய்.

இதில் நான்கு கால்கள் கொண்ட தன்மை, அதாவது ***விசேஷணம்*** ( தர்மம் ), ***விசேஷ்யமான*** (தர்மியான) நாய்க்கு கண்டிப்பாக இருப்பதோடு, மற்ற ப்ராணிகளிடமும் இருக்கக் கூடியது. ஆக, இந்த தன்மை தர்மியான நாய்க்கு ***நிரூவித ஸ்வரூப விசேஷணம்*** எனலாம்.

3. ஆக, ***விசேஷ்யத்தை*** உணர்த்த தேவையானது ***விசேஷணம்***.

***விசேஷ்யமாவது*** ஒரு இலக்கைக் குறிப்பது ; அதாவது, உணர்த்த வேண்டிய வஸ்துவையே அல்லது நிலையையோ குறிப்பதாகும்.

***விசேஷணமாவது*** ஒரு இலக்கை அடையாளம் காட்டுவதானது ; அதாவது, ***விசேஷ்யத்தை*** உணர்த்த தேவையானது.

அந்த ***விசேஷணமாவது*** ஸ்வரூப நிரூபகமாவோ அல்லது நிரூபித ஸ்வரூப விசேஷணமாகவோ இருக்கலாம்.

உதாரணமாக :

ஒருவனை ‘நீளமான காது உடையவன்’ என்று சொல்லும் போது, அந்த நீள காதான ***விசேஷணம்*** எப்போதுமே மாறாதது. இதனால் இந்த சொற்கள் ***விசேஷ்யமான*** அவனுக்கு நிரந்தரமான ***விசேஷணமாகும்***

ஒருவனை ‘நீல சட்டை அணிந்திருப்பவன்’ என்று சொல்லும் போது, அந்த நீல சட்டையான ***விசேஷணம்*** மாறக் கூடியது. இதனால் இந்த சொற்கள் ***விசேஷ்யமான*** அவனுக்கு நிரந்தரமற்ற ***விசேஷணமாகும்***

இந்த விசேஷண விசேஷ்ய சம்பந்தத்தினால், உணர வேண்டுவதில், சில குற்றங்கள் அமைய வழி உண்டு ; அதாவது, ***சம்சயம்*** ; ***விபர்யயம் / விபரீத ஞானம்*** ; மற்றும் ***அந்யதா ஞானம்***

# ***சம்சயம்*** - ஐயம், சந்தேகம், தெளிவின்மை - ***விசேஷணத்தை*** மாறாடி நினைப்பது.

அதாவது, ***விசேஷ்யத்தை*** க்ரஹிக்கும் பொழுது ஒரே சமயத்தில் விருத்தமான பல ***விசேஷணங்கள்*** தோன்றுவது சம்சயம் ஆகும்.

***லௌகீக உதாரணம்*** :

நாம் இருட்டில் தூரத்தில் ஒரு வஸ்துவைப் பார்க்கிறோம். அது கை, கால்கள் கொண்ட மனிதன் போன்று தெரிகிறது. அதே சமயத்தில் அது கிளைகள் கொண்ட மரம் போன்றும் தோன்றுகிறது. இது தன்னையே ***ஸ்தாணுர் வா புருஷோ வா*** (மரமா அல்லது மனிதனா) என்று உரைப்பர்கள். ஒரே வஸ்துவினிடத்தில் மரத்தினுடைய ***விசேஷணங்களும்***, மனுஷ்ய ***விசேஷணங்களும்*** தோன்றுவதால் – இது சம்சயம் ஆகும்.

***ஸம்ப்ரதாய உதாரணம்*** :

ப்ருஹ்மத்தின், ஸ்வரூப நிரூபக தர்மமாக,

***ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ருஹ்ம; ஆனந்தம் ப்ருஹ்ம; அமலம் ப்ரஹ்ம***

என்கிறது உபநிஷத் வரி.

அதாவது, பரம்பொருளானவன் விகாரமற்றவன்; பூரண ஞானமுடையவன், விபு ஸ்வரூபன், ஆனந்த ஸ்வரூபன், குறைகள் அற்றவன்.

இங்கு, உபநிஷத் உரைப்பது ஸகுண ப்ருஹ்மமா அல்லது நிற்குண ப்ருஹ்மமா என்று *விசேஷ்யத்தில்* சந்தேகம் எழ,

பூர்வக்ஷிகள் நிர்குண ப்ருஹ்மத்தை உரைப்பதால், ப்ருஹ்மத்தின் தர்மத்தை மாற்றி *அஸத்யாத் வ்யாவ்ருத்தி*.... போன்ற குணமற்ற தன்மைகளை தங்கள் பக்ஷமாகக் கூற விழைகின்றனர்.

*நஸ்தா நத அபி பாஸ்ய உபயலிங்கம் சர்வத்ர ஹி* (3-2-11)

என்கிற ஸூத்ரம் கொண்டு ப்ருஹ்மத்தை ஸகுணம் என்று ஸித்தாந்தம் செய்கிறார் ஸ்ரீ ராமானுஜர் ; அதாவது ஹேய குணங்கள் அற்றவன் என்றும் மற்றும் கல்யாண குணம் நிரம்பியவன் என்றும் ஸ்ரீ பாஷ்ய உபய லிங்க பாதத்தில் ஸ்ரீ ராமானுஜர் விவரிக்கிறார்.

# *விபர்யயம் / விபரீத ஞானம்* - *விசேஷணம்* கொண்டு அறியப் படும் *விசேஷ்யத்தை* மாறாடி நினைப்பது

*லௌகீக உதாரணம்* :

பொன் நிறம் என்கிற தன்மை ( *விசேஷணம்* ) பொதுவாய் இருக்க, அதனால் அறியப் படும் *விசேஷ்யத்தில்* பித்தளையை தங்கம் என நினைப்பது.

*ஸம்ப்ரதாய உதாரணம்* :

தைத்ரீய உபநிஷத்தில் கூறப்படும் ஸர்வேஸ்வரனுக்கான இலக்கணமாவது -

*யதோவா இமானி  பூதானி ஜாயந்தே யேன ஜாதானி ஜீவநதி யத் பிரயந்த்ய பி சம்விசந்தி தத் விஜிஜ்ஞாஸ் ஸ்வ தத் ப்ரஹ்மேதி*

அதாவது,

எவனிடமிருந்து இந்த லோகங்கள் உண்டாகிறதோ, எவனால் அவை காக்கப் படுகிறதோ, எவனிடத்தில் அவை லயத்தை அடைகிறதோ அவனே ஸர்வேஸ்வரன்.

இங்கு மதாந்தரங்களில் ஏற்படும் பரதேவதா நிஷ்கர்ஷம் விபர்யயம்.

# *அந்யதா ஞானம்* - *விசேஷ்யத்தை* க்ரஹிக்கும் விஷயத்தில் மாறாட்டம்.

*லௌகீக உதாரணம்* :

மகளீர் கல்லூரி ஒன்றில்,  கல்லூரி சேர்க்கைக்கான மதிப்பெண் தகுதி விளம்பரப் படுத்திய போது, அந்த தகுதி உடைய ஒரு ஆண்மகன் விண்ணப்பிப்பது *அந்யதா ஞானம்* ; இங்கு, மகளீர் கல்லூரி என்பதனை உணராமல் வ்யவஹரிப்பதாகும்.

*ஸம்ப்ரதாய உதாரணம்* :

ப்ரணவத்தால் உணர்த்தப் படுகிற பகவத் சேஷத்வத்துக்கு விரோதமாக *நம:* சப்தத்திற்கு அர்த்தம் கற்பிப்பது அந்யதா ஞானம் ஆகும் ; அதாவது, நமஸ் சப்த விளக்கமான *ந மம ஸ்வாமித்வம்* (ஜீவனுக்கு நிருபாதிக ஸ்வாமித்வம் கிடையாது) மற்றும் *ந மம ஸ்வாதந்த்ரியம்* (ஜீவனுக்கு நிரபேக்ஷ ஸ்வாதந்த்ரியம் கிடையாது) என்பதை விளக்க, ஜீவர்களை தேவதாந்தரங்களுக்கு சேஷமாக நினைப்பது *அந்யதா ஞானம்* ; இங்கு, ப்ரணவ அர்த்தத்தை உணராமல் வ்யவஹரிப்பதாகும்.

4. ஸ்வாமி தேசிகன், *தத்வபதவீ* என்கிற சில்லரை ரஹஸ்யத்தில்,

*முக்திக்கு அருள் சூட மூன்றைத் தெளி முன்னம் இத்திக்கால் ஏற்கும் ஹிதம்*

என்று, மோக்ஷத்திற்கான பகவத் க்ருபையை பெறும் முன் தத்வ த்ரயத்தை (சேதநம், அசேதநம், ஈஸ்வரன்) அறிவதால், உபாயம் ஸித்திக்கும் என அருளினார் ;

# இதல், முக்கியமானது, அர்த்த பஞ்சக ஞானம் :

***ப்ராப்யஸ்ச ப்ருஹ்மணோ ரூபம் ப்ராப்துஸ்ச ப்ரத்யுகாத்மநஹா. ப்ராப்தி உபாயம் ஃபலம் சைவ ததா ப்ராப்தி விரோதி ச. வதந்தி ஸகலா வேதாஹா இதிஹாஸ புராணகாஹா***

என்கிற ஹாரீத ஸம்ஹிதை வரிகள் கொடுக்கும் அர்த்த பஞ்சகம்.

அதன் விளக்கமாவது:

***ப்ருஹ்மம்* -** பரம் பொருள்

***சம்சாரி ஜீவர்கள்* -** இவ்வுலகில் காணும் மக்கள்

***உபாயம்* -** பலனிற்கான வழி

***பலன்* -** உபாயமளிக்கும் நல் விளைவு

***விரோதி* -** மோக்ஷத்தற்கு தடைகள்

# ஆக, **சாஸ்த்திர விசேஷண விசேஷ்யத்தை சரிவர க்ரஹிக்காத போது வரும் ப்ரத்யவாயங்கள்**, சம்சய விபரீத அந்யதா ஞான பூர்வகமாக, மோக்ஷ பலனுக்கு பாதகத்தை உண்டாக்கும்.

5. அதனால், வாதங்களுக்கு ப்ரசக்தி உண்டேயாகிலும், பூர்வாசார்யர்கள் வழி மீறி, சாஸ்த்திர விஷயங்களில் வாதம் செய்வது அநுசிதம் ; ப்ர்யவாயகரம் :

# இதிஹாஸ ஸமுச்சயத்தில், மஹரிஷி,

***ஏகம் யதி பவேத் சாஸ்த்திரம் ஞானம் நிஸ்ஸம்சயம் பவேத் பஹுத்வாதிஹ சாஸ்த்ராணாம் ஞாநதத்வம் ஸுதுர்லபம்***

அதாவது, சாஸ்த்திரம் ஒன்றை மட்டுமே உரைப்பவையாக இருத்தால், எந்த விதமான ஐயமும் இன்றி அனைவருக்கும் சரியான ஞானம் உண்டாகும். ஆனால் சாஸ்த்திரங்கள் பலவாக உள்ளதால் உண்மையான ஞானம் பெறுவது மிகவும் கடினமான செயலாகும்,

என அருளிகிறார்.

# ஆகையால், ஸ்வாமி தேசிகனின் ***தத்வ த்ரய சிந்தனாதிகார*** வரிகள் சாஸ்த்திர ஞானம் பெறும் ப்ரகாரத்தை அநுக்ரஹிக்கிறார் :

***சாஸ்த்திர ஞானம் பஹு க்லேசம் புத்தே: சலன காரணம் உபதேசாத் ஹரிம் புக்த்வா விரமேத் ஸர்வ கர்மஸு***

என்கிறபடி, மனவுருதி அற்ற சாமான்ய சம்சாரி ஜீவர்கள், பல விதமான சாஸ்த்திர வரிகளுக்கு அர்த்த நிர்ணயம் செய்வது கடினம். அவ்வர்த்தங்களில் கலக்கம் ஏற்படும். அதனால், அவர்கள், தெளிவான தத்வ

ஞானம் கொண்டு ஸதாசார்ய பரம்பரையில் வந்த தன் ஆசார்யன் முகத்தாலே மிக முக்கியமான சாஸ்த்திர விஷயங்களை பிழையற கற்று அறிய வேண்டும்.

# இந்த சந்தர்ப்பத்தில், ஸ்வாமி தேசிகன், புலன்களுக்கு அப்பாற் பட்ட சாஸ்த்திர விஷயங்களில், சாஸ்த்திர விரோதமாக, உலக நியதிகளைக் கொண்டு, தர்க்கம் செய்யலாகாது என்கிறார்.

***தர்க்க பாண்டித்யத்தாலே நினைத்த்தெல்லாம் ஸாதிக்கலாயிருக்கச் செய்தேயிறே நாம் ப்ரமாண சரணராய் போருகிறது***

என்கிறார் ஶ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார க்ரந்தத்தில் ஸ்வாமி தேசிகன்.

6. மோக்ஷ உபாயமாக, ப்ரபத்தி அநுஷ்டித்த ***விசேஷ்யமான*** க்ருதக்ருத்யன் விஷயத்தில், அவனுக்கு ***விசேஷணமான*** க்ருதக்ருதய தன்மைகளை சாஸ்த்ரீயமாக உணராத போது, ப்ரத்யவாயங்கள் உத்தர க்ருத்யத்தில் பர்யவசிக்கும் ; மற்றவர்க்கும் அநர்த்தாவகமாகும் :

# ***க்ருதக்ருத்யனுக்கு லௌகீக கர்தவ்யங்கள் அநுபாதேயமா?*** :

ஐந்தாவது வேதமாகக் கொண்டாடப்படும், மஹா பாரதத்தில்,

***யத் கிஞ்சித் வர்ததே லோகே ஸர்வம் தன்மத் விசேஷ்டிதம் அந்யோ அந்ய சிந்தயதி ஸ்வச்சந்தம் விததாம்யஹம்***

என்கிறது பகவத் வசனம். அதாவது, உலகில் நடக்கும் அனைத்தும் ஸர்வேஸ்வரன் இஷ்டப்படியே தான் ஆகும். ஆக, கர்ம அநுகுணமாக, ஈஸ்வரன் ஸங்கல்பம் அன்றி ஒன்றும் நடவாது என்று மனத்தில் தெளிந்து இருக்க வேண்டுவதாகிறது.

இந்த வரி கொண்டு, க்ருதக்ருத்யன் லௌகீக கர்தவ்யங்களை புறக்கணிக்கலாகாது ; மாறாக, க்ருதக்ருத்யன் செய்து போகும் ஸகல லௌகீக செயல்களும் பகவத் அதீனமாக நடப்பதில் தெளிவு அவசியம் ; இதையே, ஸர்வேஸ்வரனான கண்ணன், வகுத்த கர்தவ்யங்களைச் செய்யும் போது மன நிலை எவ்வாறு இருக்க வேண்டும், என பகவத் கீதையில் ( 9- 27) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

***யத் கரோஷி யத் அஸ்நாஸி யத் ஜுஹோஷி ததாஸி யத் யத் தபஸ்யஸி கௌந்தேய தத் குருஷ்வ மத் அர்பணம்***

அதாவது,

குந்தி மகனே! தேக யாத்திரைக்காக எந்த கர்மத்தை செய்கிறாயோ தேக ஸம்ரக்ஷணத்துக்காக எதை உண்கிறாயோ சாஸ்த்திர விதிப்படி எந்த ஹோமம் செய்கிறாயோ எதை தானம் அளிக்கிறாயோ எந்த தவம் செய்கிறாயோ அதை எனக்கு அர்ப்பணம் செய்து விட்டு செயல் புரிய வேண்டும், என்கிறான்.

ஆக, பகவத் வசனங்களை சரிவர க்ரஹிக்காத போது, விபரீத அரத்தங்களும் அதனால் விபரீத ஆசரணங்களும் ஸித்திக்கும் ; ஆக, ***பகவத் ஸங்கல்பம்*** என்பது லௌகீக வைதீக கர்தவ்யங்களை செய்யாதிருக்க சொல்வதாகாது ; கர்தவ்யங்களை சரிவர செய்த பின்பு, அதனை கர்மாநுகுண பல ப்ரதனான எம்பெருமான் தலைக் கட்டிக் கொடுக்கிறான் என்கிற ஸாத்வீக த்யாகம், சொன்னபடி.

யுத்த களத்திலே, க்ஷத்ரீய தர்மத்தை கை விடும் அளவிற்கு, அர்ஜுனனுக்கு உண்டான சம்சய விபர்யயங்களை உதாரணமாகக் கொள்ளலாம் ; தகாத பந்துக்களிடம் பற்றினாலும், தகாத இடத்தில் கருணையினாலும், உண்டான தர்மத்தில் அதர்ம புத்தியாலே, கலங்கி நிற்பவனாய், சரணமடைந்தவனான, அர்ஜுனனைக் குறித்து, கீதா சாஸ்த்ரம் சொல்லப்பட்டது, என்பதை

*அஸ்தாந ஸ்நேஹ காருண்ய தர்ம அதர்ம தியாகுலம் பார்த்தம் ப்ரபபந்நம் உத்திஸ்ய சாஸ்த்ர அவதரணம் க்ருதம்*

என்கிற ஸ்லோகத்தில் முதல் அத்யாயம் விளக்கப் படுகிறது, என அருளினார் ஸ்ரீ ஆளவந்தார்.

ஆக, க்ருதக்ருத்யனே அனாலும், வைதீக லௌகீக கர்தவ்யங்கள் அநுஷ்டேயம் ; கர்தவ்யங்களை புறக்கணிப்பது ப்ரத்யவாயகரம்.

# *லோக உஜ்ஜீவனார்த்தம், ஸர்வ லோக உபதேசம், க்ருதக்ருத்யனுக்கு, உசிதமா?*

ஸ்வாமி தேசிகன் ***உத்தரக்ருத்யாதிகாரத்திலே***

***ஸந்தோஷார்த்தம் விம்ருசதி முஹு: ஸத்பி: அத்யாத்ம வித்யாம்***

என அருளினார். அதாவது, க்ருதக்ருத்யன், சித்த சந்தோஷத்திற்காக, அத்யாத்ம சாஸ்த்திரத்தை கேட்டுக் கொண்டும் சொல்லிக் கொண்டும், உத்தரக்ருத்யத்தை செய்து போக வேண்டுவதாகக் கூறப் படுகிறது.

இந்த வரி கொண்டு, க்ருதக்ருத்யன் லோக உஜ்ஜீவனார்த்தம், ஸர்வ லோக உபதேசம் செய்து போகலாம் என்பதாகாது ; ஏனெனில், ஸர்வேஸ்வரனான கண்ணனே கீதோபதேசத்தை முடித்துவிட்டு, சிஷ்ய குண பூர்த்தி அற்றவனுக்கு உபதேசிக்கலாகாது, எனகிறான் :

***இதம் தே ந அதபஸ்காய ந அபக்தாய கதாசந ந ச அஸூஸ்ரூஷவே வாச்யம் ந ச மாம் ய: அப்யஸூயதி***
(பகவத் கீதை : 18-67)

அதாவது,

உனக்கு உபதேசிகக்கப் பட்ட இந்த ஆத்ம விஷயத்தை, எப்போதும் அநுஷ்டானம் அற்றவனுக்கும், அநுஷ்டானம் இருந்தாலும் ஆசார்ய பகவத் பக்தி இல்லாதோனுக்கும், அநுஷ்டானம் பக்தி இருப்பினும் கைங்கர்யத்தில் ருசி அற்றவனுக்கும், என்பால் பொறாமை உடையோனுக்கும் சொல்லாதே, என்கிறான் கண்ணன்.

ஆக, க்ருதக்ருத்யனே அனாலும், உத்தரக்ருத்யமாக சாஸ்த்திர உபதேசம், சிஷ்ய குண பூர்த்தி அற்றவனுக்கு, செய்வது ப்ரத்யவாயகரம் ; இவ்விஷயத்தில், ***சிஷ்ய பாபம் குரோரபி*** என்று சிஷ்ய குண புர்த்தி அற்றவனால் உபதேசிப்பவனுக்கு ஞானக் குறைவு ஏற்படும் நிலையை,

***வருவதை விசாரியதே, இந்திரனுக்கு உபதேசித்து, தானும் ப்ருஹ்ம வித்யையை மறந்து, தன் சிஷ்யரான நாரத பகவானை இட்டு ஸர்வேஸ்வரன் உணர்த்துவிக்கும் படி இருந்த சதுர்முகன் பக்கலிலே கண்டு கொள்வது***

என்று ஸ்வாமி தேசிகன் ***குருபரம்பரா சாரத்தில்*** அருளினார்.

# *முறைப்படி சாஸ்த்திர ஞானம் பெற்ற க்ருதக்ருத்யனானவனுக்கும் கார்ப்பண்ய அநுஸந்தானம் உத்தர க்ருத்யம் ; அல்லாத போது ப்ரத்யவாயகரம்*

மோக்ஷ காரணமான சரணாகதி அநுஷ்டித்தவனது உத்தர க்ருத்யமாவது, ***கார்ப்பண்ய அநுஸந்தானம்*** ; அதாவது, ஸ்வாமி தேசிகன், ***உத்தரக்ருத்யாதிகாரத்தில்***, சரணாகதனுக்கு அநுஸந்திக்க வேண்டுவதாக

***கார்ப்பண்யம் குலையாமைக்காக சொல்லாது ஒழிய வேண்டுமவற்றில் ப்ரதானம் ஆத்ம உத்கர்ஷம்***

என அருளினார் ; இதன் தாத்பர்யமாவது,

தன் தகுதி குறைவை மறவாமல் இருக்க, வாக்கினால் சொல்லாமல் இருக்க வேண்டுவதாவது : தன் உயர்த்தி மற்றும் மற்றவர் தாழ்த்தி என தெளிவிக்கிறார்.

**# *முறைப்படி சாஸ்த்திர ஞானம் பெற்ற க்ருதக்ருத்யனானவனுக்கும் சாஸ்த்திர விரோத 'ஹேது வாத ஸம்ஸர்க்கம்' ப்ரத்யவாயகரம்***

யாக்ஞ்யவல்க்யர் ஸ்ம்ருதியால்,

***டம்பி ஹைதுக பாஷண்டி பக வ்ருத்தீச்ச வர்ஜயேத்***

என்கிறது.

அதாவது, மற்றவர்கள் கொண்டாட வேண்டி தர்ம காரியங்களைச் செய்பவனும், ***வேத ஆதாரத்தை ஒத்துக் கொள்ளாமல் தன் அறிவைக் கொண்டு புலன்களுக்கு அப்பாற்பட்ட விஷயங்களை வாதிடுபவனும் (ஹைதுகர்)*** ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை, மற்ற தாழ்ந்த தேவதைளுக்கு சமமாக அங்கீகரிப்பவனும் (பாஷாண்டி), வஞ்சனையால் தான் நினைத்தவற்றை அடைய விரும்புபவனையும் விலக்க வேண்டியவர்களாக சாஸ்த்திரம் வர்ணிக்கிறது.

இதையே, கண்ணன் பகவத் கீதையில் (7-15) ஹைதுக சம்பாஷணம் ப்ரத்யவாயகரம் என அருளினான்.

***ந மாம் துஷ்க்ருதிந: மூடா: ப்ரபத்யந்தே நராதமா: மாயயா அபஹ்ருத ஞானா ஆஸுரம் பாவம் ஆஸ்ரிதா:***

நால் வகையானவர்கள் கண்ணனை பூஜிப்பதில்லை என்கிறான்.

***முதலாவதாக*** தன்னை ஸ்வதந்தரன் என்று நினைப்பவர்களும், பகவானுக்கு தான் தாஸன் என்றும் அறியாதவர்களும், இவ்வாறு விபரீத ஞானம் உடையவர்கள் அவனை பூஜிப்பதில்லை. அவர்களை கண்ணன் ***மூடன்*** என விவரிக்கிறான். அவர்களின் இந்த எண்ணத்திற்கு காரணம்  அவர்களுடைய பூர்வ பாப விசேஷம்.

***இரண்டாவதாக*** கண்ணனின் உயர்த்தியை அறிந்திருந்தும், தான் மிகுந்த பாபம் செய்து பிறவியை எடுத்திருப்பதை அறிந்திருந்தும், ஞானத்தில் தெளிவின்மையால் அவனை நெருங்க நினைக்காதவர்கள்; உலக வாழ்விலேயே லயித்து இருப்பவர்கள். அவர்களை கண்ணன் 'நராதமன்' என விவரிக்கிறான். அவர்களை கண்ணன் ***நராதமன்*** என விவரிக்கிறான். இவர்கள் மூடனை விட அதிக பாபம் செய்தவன்.

***மூன்றாவதாக*** பர தத்வ பரம ஹித பரம புருஷார்த்த விஷயங்களை சாஸ்த்ரப்படி அறிந்திருந்து, பிறகு மற்றவர்களின் வஞ்சக பேச்சால் ***பெற்ற ஞானத்தை இழந்தவன்*** ; அதனால் பகவானை விட்டு அகன்று சென்று விடுபவர்கள். உலக விஷயங்களை தன் அறிவை பயன் படுத்தி ஆராய்ச்சி செய்யலாம். ஆனால், புலன்களால் அறிய முடியாத ஆத்ம விஷயங்களையும், ஸர்வேஸ்வரனை பற்றிய விஷயங்களையும், சாஸ்த்ரம் கொண்டே அறிய வேண்டும். ஹைதுக சம்பாஷணத்தால் அறிவை இழப்பவர்கள் நராதமனை விட அதிக பாபம் செய்தவன்.

***நான்காவதாக*** கண்ணனின் மேன்மையை உள்ளபடி அறிந்திருந்து, அதனால் அவனிடம் அஸூயையும் பகைமையும் காட்டி, அவனை விட்டு அகன்று சென்று விடும் ***பகவத் த்வேஷிகள்***. இவன் எல்லோரையும் விட அதிக பாபம் செய்தவன்.

ஆக, இந்த இருள் தருமா ஞாலத்தில் சாஸ்த்திரமே கை விளக்கு ; அந்த ஞானத்தை நல்லதொரு குரு பரம்பரையில் வந்த ஆசார்யனிடம் பெற வேண்டும் ; மனம் போனபடி, சாஸ்த்திர விரோதமான ஹேது வாதங்கள், தூர பரிஹரணீயம்.

இதனால், தெளிந்திருக்க வேண்டியது, *ஸந்தோஷார்த்தம் விம்ருசதி முஹு: ஸத்பி: அத்யாத்ம வித்யாம்* (க்ருதக்ருத்யன், சித்த சந்தோஷத்திற்காக, அத்யாத்ம சாஸ்த்திரத்தை கேட்டுக் கொண்டும் சொல்லிக் கொண்டும், உத்தரக்ருத்யத்தை செய்து போக வேண்டுவதாகக் கூறப் படுகிறது) என்பதற்கு, க்ருதக்ருத்யனானவன், சாஸ்த்திர விரோதமில்லாமல், முன்னோர் வழி மீறாமல், சாஸ்த்திர ஞானமுடைய பகவத் பக்தர்களோடு, விஷய பரிமாற்றம், சித்த ஸந்தோஷத்திற்காக, செய்து போக வேண்டியதை சொன்னபடி.

ஆத்ம விஷய பரிமாற்றத்தை கண்ணன் பகவத் கீதையில் (10-9),

*மச்சித்தா மத்கதப்ராணா போதயந்த: பரஸ்பரம் கதயந்த: ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச*

என தெளிவிக்கிறான்.

அதாவது,

மனத்தை என்பால் வைத்து, என்னால் உயிர் தரிப்பவனாய் ஒருவருக்கொருவர் தம் அநுபவத்துக்கு வந்த என் கல்யாண குணங்களை விளக்கிக் கொண்டும் என்னுடைய கதைகளைப் பற்றி பிறருக்குத் தெளிவாக கூறிக் கொண்டும் எப்போதும் கூறுவதைப் பலனாக்கி சிலர் மகிழ்கிறார்கள்; கேட்பதைப் பலனாக்கி சிலர் மகிழ்கிறார்கள். ஆக, வக்தா மற்றும் ஸ்ரோதா இருவருக்கும் உள்ள நியமம் சொன்னபடி.

*ந தைவம் தேசிகாத் பரம்*

*தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்*

******

11.7.2023
செவ்வாய் கிழமை

*பகவத் க்ருபை அவன் ஸ்வாதந்த்ரிய விஷயம் மற்றும் விதி விலக்கு - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்*

1. பரம காருணிகனான எம்பெருமான், ஸர்வ ஸ்வதந்திரன் ஆன படியால், சம்சாரி ஜீவர்களுக்கு அவன் மோக்ஷ பலனளிப்பது, அவனது இச்சா கார்யம் மட்டுமே என்பது போலே சில ப்ரமாணங்கள் கூறுகின்றன :

# கடோபநிஷத்,

*நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ச்ருதேந யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ் தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்*

என்கிறது. அதாவது, இந்தப் பரம்பொருளை வேதங்களின் மூலமோ, பக்தி யோகம் மூலமோ, அவனைப் பற்றியே கேட்டுக் கொண்டிருப்பதன் மூலமோ அடைய இயலாது; அந்தப் பரம்பொருள் எந்த ஒருவன் தன்னை அடையத்தக்கவன் என்று தேர்ந்தெடுக்கிறானோ அந்த ஒருவனுக்கு மட்டுமே தன்னை உணர்த்துகிறான் என்று கூறியது இந்த உபநிஷத் வாக்யம்.

ஆக, ஸர்வ ஸ்வதந்தரனான எம்பெருமான், ஜீவர்களின் க்ருத்யம் அன்றிக்கே, அவர்களை சம்சாரத்தில் வைத்தும் நித்ய விபூதியில் சேர்த்தும் பலன் அளிக்கிறான், என்றாகிறது.

# கௌஷிதகி உபநிஷத்,

*__ஏஷ ஏவ சாது கர்ம காரயதி தாஷ்யமேப்யோ லோகேப்ய உன்னி நிஷதே ஏஷ ஏவாஸது கர்ம காரயதி தஷ்யம் அதோ நினியதே__*

பகவான் இந்த பிறப்பு மற்றும் இறப்பு உலகில் இருந்து விடுபட விரும்புவோரை நற்செயல்களைச் செய்ய வைக்கிறான் ; மேலும் பகவான் யாரை நரகத்திற்கு அனுப்ப விரும்புகிறாரோ அவர்களை கெட்ட செயல்களைச் செய்ய வைக்கிறான்.

ஆக, ஸர்வ ஸ்வதந்தரனான எம்பெருமான், ஜீவர்களின் ப்ரயத்நம் அன்றிக்கே, அவர்களை விஹித மற்றும் நிஷேத செயல்களில் ஈடுபடுத்தி ஸுக துக்கங்களை அளிக்கிறான், என்றாகிறது.

# இதையே, ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழியில், (10-8-9)

*__இன்று என்னைப் பொருளாக்கித் தன்னை என்னுள் வைத்தான் அன்று என்னைப் புறம் போகப் புணர்த்தது என் செய்வான்? குன்று எனத் திகழ் மாடங்கள் சூழ்திருப் பேரான் ஒன்று எனக்கு அருள் செய்ய உணர்த்தல் உற்றேனே__*

என அருளினார்.

அதாவது,

அநாதிகாலம் விலக்கப்பட்டு, சம்சாரத்தில் ஈடுபடுத்தி இருந்த என்னை இன்று ஒரு வஸ்துவாகக் கொண்டு பரம போக்யனன தன்னை என் நெஞ்சிலே தானே கொண்டு வைத்தான்; அநாதிகாலம் என்னை உபேக்ஷித்து விட்டு வைத்தது எதற்காக? என்கிற இந்த பாசுர அர்த்ததமானது ஸர்வேஸ்வரனின் ஸ்வாதந்த்ரியத்தின் செயல் என்றாகிறது.

ஆக, ஸர்வ ஸ்வதந்தரனான எம்பெருமான், ஜீவர்களின் யத்நம் அன்றிக்கே, அவர்களை உபேக்ஷிப்பதும் ரக்ஷிப்பதும் செய்து போகிறான், என்றாகிறது.

2. சாஸ்த்திர விஷயங்களைத் தெளியும் போது, அதில் *__சம்சயம்__* (தர்மத்தை மாறாடி நினைப்பது) ; *__விபர்யயம் / விபரீத ஞானம்__* (தர்மம் கொண்டு அறியப் படும் தர்மியை மாறாடி நினைப்பது) ; மற்றும் *__அந்யதா ஞானம்__* (தர்மியை க்ரஹிக்கும் விஷயத்தில் மாறாட்டம்) என்கிற குற்றங்கள் நீங்க அர்த்த நிர்ணயம் செய்து போக வேண்டும்.

இதில், அந்யதா ஞானமாவது, பல விஷயங்கள் உள்ள சப்த ப்ரமாணத்தில் (வேத வேதாந்தங்களில்), ஒன்றோடு ஒன்று முரண்படாத வகையில், அர்த்த நிர்தேசம் பண்ண வேண்டுவது.

# இதையே, இதிஹாஸ ஸமுச்சயத்தில், மஹரிஷி,

*__ஏகம் யதி பவேத் சாஸ்த்திரம் ஞானம் நிஸ்ஸம்சயம் பவேத் பஹுத்வாதிஹ சாஸ்த்ராணாம் ஞாநதத்வம் ஸுதுர்லபம்__*

அதாவது, சாஸ்த்திரம் ஒன்றை மட்டுமே உரைப்பவையாக இருத்தால், எந்த விதமான ஐயமும் இன்றி அனைவருக்கும் சரியான ஞானம் உண்டாகும். ஆனால் சாஸ்த்திரங்கள் பலவாக உள்ளதால் உண்மையான ஞானம் பெறுவது மிகவும் கடினமான செயலாகும்,

என அருளிகிறார்.

# இதனால், வேத வேதாந்தங்களுக்கு, விபரீத மற்றும் அந்யதா அர்த்தங்களை பல வைதீக மதங்கள், சொல்லியிருக்கிறது ; உதாரணமாக, அத்வைத மதத்தில், சங்கரர், ப்ருஹ்மத்துக்கு அக்ஞானம் கொண்டு தன்னைப் பலவாக பிரமிக்கிறது, விளக்கியிருக்கிறார் ; அப்படி இல்லாத பரமாத்ம நிலை வந்தால், அதுவே மோக்ஷம், என்கிறர் ; அதற்கு சங்கரரால் ப்ரமாணமாக உரைக்கப் படுவதாவது :

***ப்ருஹ்மம் ஸத்யம் ஜகந் மித்யா*** ( ப்ருஹதாரண்ய உபநிஷத்) - பரம்பொருளே உண்மையானது; மற்றவை பொய்யான தோற்றமே.

***ஏகமேவ அத்விதீயம்*** ( சாந்தோக்ய உபநிஷத்) - பரம்பொருள் ஒன்றே உளது; மற்ற எதுவும் கிடையாது.

***ஸர்வம் கல்விதம் ப்ருஹ்ம*** ( சாந்தோக்ய உபநிஷத்) அனைத்தும் பரம்பொருளே.

# சங்கரரின் விளக்கம் மற்ற ஸ்ருதி ப்ரமாணங்களோடு விரோதிக்கும்.

தைத்ரீய  உபநிஷத்தில்,

***நாராயண பரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர: நாராயண பரோ ஜ்யோதி: ஆத்மா நாராயண: பர:  யச்ச கிஞ்சித் ஜகத் யஸ்மிந் த்ருஸ்யதே ஸ்ரூயதேபி வா அந்தர்பஹிஸ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:***

என்கிறது.

அதாவது,

நாராயணனே பரப்ரஹ்மம், நாராயணனே பரதத்வம், நாராயணனே பரஞ்சோதி, நாராயணனே பரமாத்மா, இவ்வுலகில் காண்பனவும் கேட்பனவுமாக எந்தெந்தப் பொருள்கள் உள்ளனவோ, அவையனைத்திலும் உள்ளும் புறமும் வியாபித்து விளங்குபவன் நாராயணனே.

ப்ருஹதாரண்யக உபநிஷத்தில், அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில்,

***ய ஆத்மநி திஷ்டந் ஆத்மந அந்தரோ யம் ஆத்மா ந வேத யஸ்ய ஆத்மா சரீரம் ய ஆத்மநம் அந்தரோ யமயதி ஸ த ஆத்ம அந்தர்யாமி அம்ருத:***

அதாவது,

ஸகல ஜீவாத்மாக்களும் ஸர்வேஸ்வரனுக்கு சரீரம்;  அதாவது, அவன் ஸர்வ ஜீவர்களுக்கும் அந்தர்யாமி,

எனப்படுகிறது.

மேலும், ப்ருஹதாரண்யக உபநிஷத்தில்,

***யப் ப்ருதிவியம் திஷ்டன் ப்ருதிவ்யா அந்தரோ யம் ப்ருதேவீ ந வேத யஸ்ய ப்ருத்வீ சரீரம் யப்ருதிவீம் அந்தரோ யமயதி தா ஆத்மா அந்தர்யாமி அம்ருத:***

அதாவது,

த்ரிகுணமான மூலப்ரக்ருதி ஸர்வேஸ்வரனுக்கு சரீரம்;  அதாவது, அவன் விபுவானபடியால், தான் இல்லாத இடம் ஒன்று உண்டு என்று ஆகாதபடி அசேதனங்களுக்கும் அந்தர்யாமி,

எனப்படுகிறது.

# ஆக, சேதந அசேதந வஸ்து விசிஷ்ணனான எம்பெருமன் ஒருவனே என்கிற சரீர-ஆத்ம சம்பந்த த்தை உணர்ந்தால் அல்லது, ஸ்ருதி வரிகளில் உள்ள விரோதம் பரிஹரிக்க ஒண்ணாது ; அதனால், ஸத் ஸம்ப்ரதாய பூர்வாசார்யர்களின், ப்ரமாண நிர்தேச வழியே உபாதேயம் ; பகவத் ராமானுஜருக்கு ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை, வேத வேதாந்த ப்ரமாண பலத்தால், பர மத நிரசனம் செய்து,  நிலை நாட்டிய பெருமை சேரும்.

*ஆரண நூல் வழிச் செவ்வை அழித்திடும் ஐதுகர்க்கு ஓர் வாரணமாயவர் வாதக்கதலிகள் மாய்த்த பிரான் ஏரணி கீர்த்தி ராமானுஜமுனி இன்னுரைசேர் சீரணி சிந்தையினோம் சிந்தியோம் இனித் தீவினையே*

என்கிறார் ஸ்வாமி தேசிகன்.

அப்போது இருந்த கால கட்டத்தில் வைதீக மதங்களுக்குள் அத்வைத, த்வைத, விஸிஷ்டாத்வைத மதங்களே ப்ரஸித்தி பெற்றவைகளாக திகழ்ந்தன. வைதீக மத ஸ்தாபனர்கள் அனைவரும் ப்ருஹ்ம விசாரத்தில் உபநிஷத் பாகத்தையும், வேத வ்யாசர் அருளின சாரீரக சாஸ்த்ர பாகத்தையுமே(ப்ருஹ்ம ஸூத்ரத்தையுமே) முக்கிய ப்ரமாணமாக ஏற்றுக் கொண்டுள்ளனர். அதில் உள்ள ***ஆபாதப்ரதீதியால்*** தோற்றுகின்ற முரண்பாடுகள் நீங்க, அதில் உள்ள ***பேத***, ***அபேத*** ஸ்ருதிகளில் வெளிப்படையாக தெரிய வரும் வேற்றுமைகளை ***கடக*** ஸ்ருதியால் நிவ்ருத்தி செய்து ***இதி ஸர்வம் ஸமஞ்சஸம்*** என்று ஶ்ரீபாஷ்யக்காரருடைய ஶ்ரீபாஷ்யத்தில் மட்டுமே நிறைவு செய்யப் பெற்றது. இதனால் வைஷ்ணவ ஸித்தாந்தத்தை மட்டுமே வ்யாஸ ஸித்தாந்தம் என்றும் அழைப்பதுண்டு. நம் ஸம்ப்ரதாயத்தில் வ்யாஸர் அருளின ப்ருஹ்ம ஸூத்ரங்கள் அனைத்துமே ஏற்பு உடையனவை.

3. ஆக, பகவான் தன் ஸ்வாதந்த்ரியத்தால், விஹித நிஷேதங்களில் சம்சாரி ஜீவர்களை மூட்டி ஸுக துக்கங்களை அளிக்கிறான் என்றாலும், ஒரு சில சம்சாரி ஜீவர்களுக்கு மட்டுமே மோக்ஷ பலனளிக்கிறான் மற்றவருக்கு அப் பலனை அளிப்பதில்லை என்றாலும், உபநிஷத் சாரமான ப்ருஹ்ம ஸூத்ர வ்யாக்யானமான ஶ்ரீ பாஷ்யத்தில், உபய லிங்க பாதத்தில், ஸர்வேஸ்வரனானவன் ***அகில ஹேய ப்ரத்யநீகன்*** (குற்றங்கள் அற்றவன்) என்றும் ***கல்யாணைகதானன்*** (கல்யாண குணங்களையே உடையவன்) என்னும் விளக்கத்தோடு முரணாகும். ஏனெனில், ஒரு சிலருக்கு மட்டுமே அநிஷ்ட நிவ்ருத்தி செய்து இஷ்ட ப்ராப்தி அளிப்பானாகில், அவனுக்கு பாரபக்ஷம் உள்ளவன் மற்றும் கருணை அற்றவன் போன்ற ஹேய தன்மைகள் ஸித்திக்கும்.

# பகவத் குணத்தை, ஶ்ரீ ராமாநுஜர், சரணாகதி கத்யத்தில்,

***அகில ஹேய ப்ரத்ய நீக கல்யாணைகதாந ஸ்வேதர ஸமஸ்த வஸ்து விலக்ஷண***

என அருளியுள்ளார் ; அதாவது, ஸர்வேஸ்வரனானவன் ***அகில ஹேய ப்ரத்யநீகன்*** (குற்றங்கள் அற்றவன்) என்றும் ***கல்யாணைகதானன்*** (கல்யாண குணங்களையே உடையவன்), என்றபடி.

# மேலும், கர்மநுகுண பல ப்ரதனான எம்பெருமான், தனக்கு வைஷம்ய நைக்ருண்யாதி தோஷங்கள் ஸித்திக்காத படி, ஒரு ஸாத்யோபாயத்தை விதித்து மோக்ஷமளிக்கிறான், என்பது ப்ரமாண ஸித்தம் ; அதை,

***ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்ய: மந்தவ்ய: நிதித்யாஸிதவ்ய:***

என்கிறது ப்ருஹதாரண்யக உபநிஷத்.

அதாவது மோக்ஷமடைய பரமாத்மாவை, தான் (அகக் கண்ணால்) பார்க்கப்பட வேண்டியது, (அகக் காதால்) கேட்கப்பட வேண்டியது, (உள்)மனதால் நினைக்கப்பட வேண்டியது, (இதய ஐக்கியத்துடன்) பக்தி யோகம் செய்ய வேண்டியது என்று கூறியது இந்த உபநிஷத் வாக்யம்.

ஆக, ***யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:*** (எந்த ஒருவன் தன்னை அடையத்தக்கவன் என்று தேர்ந்தெடுக்கிறானோ அவனே மோக்ஷமடைகிறான்) என்கிற ஸ்ருதி வாக்யத்தை, ***நிதித்யாஸிதவ்ய:*** (மோக்ஷ உபாயமாக பக்தி யோகம் செய்ய வேண்டியது) என்கிற ஸ்ருதி வாக்யத்தோடு இணைத்து,

***ப்ரியதம ஏவஹி வரணீயோ பவதி***

என்று ஸ்ரீ பாஷ்யத்தில் இவ்விரண்டு உபநிஷத் வாக்யங்களும் முரண் படாதபடி, உபநிஷத் விஷயங்களை ஆராய்ந்து, அருளிச் செய்தார் ஸ்ரீ ராமானுஜர்.

அதாவது, தன் பக்கல் அன்புடன் பக்தி யோகம் செய்பவர்களையே அவன் தேர்ந்தெடுத்து அந்தப் பரம்பொருளை அடைய வழி ஆகிறான் என்று ப்ருஹதாரண்யக உபநிஷத் விஷயத்தையும், தன் பக்கல் அன்பு இல்லாதவர்கள் இந்தப் பரம்பொருளை பக்தி யோகத்தால் அடைய முடியாது என்று கட உபநிஷத் விஷயத்தையும், ஒன்று படுத்தி கூறி அருளினார் ஸ்ரீ ராமானுஜர்.

ஆக, ஸ்ருதிகள் ப்ரமாணங்களை ஆகிலும், அதன் தாத்பர்யத்தை க்ரஹிக்கும் போது, பஹுவித ஸ்ருதி ப்ரமாணங்களோடு விரோதமில்லாமல் அர்த்த நிர்ணயம் செய்ய வேண்டுவதாகிறது.

# கடோபநிஷத்தில், மோக்ஷ உபாய விரோதியான பாபங்களை களைவதன், ஸ்ரமங்கள் விளக்கப் படுகிறது.

*இந்த்ரேப்யஹ பரா அர்த்தா அர்த்தேப்யஸ்ச பரம் மன: மனஸஸ்து பரா புத்தி: புத்தேர் ஆத்மா மாஹான் பர:. மஹத: பரமவ்யக்தம் அவ்யக்தாத் புருஷப் பர: புருஷான்னப் பரம் கிஞ்சித் ஸா காஷ்டா ஸா பரா கதி:*

என்று வசீகார பரம்பரையை விளக்குகிறது. அதாவது, மோக்ஷ உபாயத்திற்காக, தான் வசீகரித்து தன் கட்டுபாட்டுக்குள் கொண்டு வர வேண்டிதவற்றை வரிசைப் படுத்தி கூறப் பட்டிருக்கிறது:

***புலன்கள்*** (ப்ராக்ருத பலன்களில் ஈடுபாடு மோக்ஷ உபாயத்திற்கு தடையாக இருக்கிறது. ஆக, வசீகரிக்க வேண்டுவது) ;

***விஷயம்*** (இப்புலன்கள் உலக விஷய சம்பந்தத்தினால் விஷய அநுபவத்தில் ஈர்க்கப் பண்ணுகிறது. ஆக, வசீகரிக்க வேண்டுவது) ;

***மனஸ்*** (அதனால் உலக விஷய ஆசை வளர்கிறது. ஆக, வசீகரிக்க வேண்டுவது) ;

***புத்தி*** (மனம், புத்தியைக் கொண்டு முடிவெடுக்கிறது. ஆக, வசீகரிக்க வேண்டுவது) ;

***ஆத்மா*** (புத்தியினால் முடிவெடுக்கப் பட்டதை ஆத்மா செயல் படுத்துகிறது. ஆக, வசீகரிக்க வேண்டுவது) ;

***சரீரம்*** (இந்த ஆத்மா சரீரம் கொண்டே அநுபவங்களை பெற முடிகிறது. ஆக, வசீகரிக்க வேண்டுவது) ;

***பரமாத்மா*** (ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனே அனைத்துக்கும் நியமிப்பவனாக இருக்கிறான். சம்சாரி ஜீவர்களின் எண்ணமும் செயலும் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு அதீனம்) ;

ஆக, அனைத்தையும் வசீகரிக்க ஒரே வழி ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயாணனை வசீகரிப்பது. இதையே ஸ்ரீராமானுஜர்,

***தஸ்ய ச வசீகரணம் தச்சரணாகதிரேவ***

என ஸ்ரீபாஷ்யத்தில் ஆனுமானாதிகரணத்தில் அருளினார்.

ஆக, சம்சாரி ஜீவன், ஸாத்யோபாயமான பக்தி யோகத்தை அநுஷ்டிப்பதால், மோக்ஷ பலனுக்கு தடையான பகவந் நிக்ரஹம் சமிக்கப் படுகிறது ; அத்தால், ஸித்தோபாயனான எம்பெருமான் மோக்ஷ பலனை அளிக்கிறான் என்பதில் ஸ்ருதிகளின் தாத்பர்யம்.

# பகவத் ராமானுஜரின் ஸ்ரீ பாஷ்யத்தில் ***ஸாதனாத்யாயமே*** அநுஷ்டானத்தோடு கூடிய மோக்ஷத்திற்கான வழி ; அதாவது,

***நாநா சப்தாதி பேதாத்*** மற்றும் ***விகல்போ அவிஸிஷ்ட பலத்வாத்***

என்கிற ப்ருஹ்ம ஸூத்ரங்கள், இதனை விளக்குகின்றன ; அதாவது, பெயர் வேறுபட்டிருப்பதால், மோக்ஷத்தை அடைவிக்கிற ப்ருஹ்ம வித்யைகள் வெவ்வேறானவை, என்றும், அனைத்து ப்ருஹ்ம வித்யைகளும் ஒரே மோக்ஷ பலனையே கொடுக்கும், என்றும் - 32 ப்ருஹ்ம வித்யைகளில் இருக்கிற உபாஸனமோ அல்லது ந்யாஸ வித்யையோ (சரணாகதி அநுஷ்டானமோ) மோக்ஷத்திற்கு உபாயமாகிறது - என தெளியலாம்.

ஆக, ஸர்வ ஸ்வதந்த்ரனான எம்பெருமானே, மோக்ஷ பலனுக்கு காரணமான ஸித்தோபாயனாகிறான், என்பதால், அது ஸாத்யோபாயத்தை நிஷேதிக்காது, என்பது ஸ்ருதி ப்ரமாண ஸித்தம்.

# ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனையே ஸர்வ விதங்களிலும் சரண்யன் என உணர்ந்து, அவன் சாஸ்த்திரத்தில் விதித்த சரணாகதி அநுஷ்டானத்தை, அவன் திருவடிகளில் செய்வதே முமுக்ஷுவான அகிஞ்சனனுக்கு செய்யப் ப்ராப்தம்.

***ஸ்ரீமந் நாராயணா ! அஸரண்ய சரண்யா ! அநந்ய சரண: த்வத் பாதாரவிந்தயுகளம் சரணம் அஹம் ப்ரபத்யே***

என்கிற பகவத் ராமானுஜரின் ***சரணாகதி கத்ய*** வரிகளால், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் திருவடிகளில் ஸ்வ நிஷ்டையாக சரணாகதி அநுஷ்டானம் செய்ததாயிற்று.

# பகவத் ராமானுஜரின் ***கத்யத்திலும் ஸ்ரீ பாஷ்யாதிகளிலும்***, ஸாத்யோபாயத்தை வேத ப்ரமாண பூர்வகமாகவும் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளோடும் ஒத்த கருத்தை வெளியிட்ட போதும், அந்த ஆசார்யோத்தமரின் க்ரந்த விரோதமாக, வேத அர்த்தத்தை நிர்தேசிக்கும் ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் உள்ளத்தை வசன பூஷண க்ரந்தங்களைக் கொண்டு தெளியலாம் :

***ரக்ஷணத்துக்கு அபேக்ஷிதம் ரக்ஷ்யத்வ அநுமதியே*** (எண் -63) - பகவத் ரக்ஷணத்தை விலக்காமையே வேண்டுவதாகிற ஸித்தோபாய ப்ரபத்தி, மோக்ஷ காரணம்.

வேத மார்க்கமான பகவத் ராமானுஜரால் கத்யாதிகளில் விளக்கப் பட்ட சாஸ்த்ரீயமான ஸாத்யோபாய அநுஷ்டானத்தை, திவ்ய தம்பதிகளின் திருவடிகளில் செய்து போக வேண்டுவதாக இருக்க, ஸாத்யோபாயத்தை தவிர்க்க வேண்டுவதாக விளக்குவது, பூர்வபக்ஷிகளின் ஸம்ப்ரதாய விரோத நோக்கம். அசாஸ்த்ரீயம்.

4. ஸர்வேஸ்வரனானவன் ***அகில ஹேய ப்ரத்யநீகன்*** (குற்றங்கள் அற்றவன்) என்றும் ***கல்யாணைகதானன்*** (கல்யாண குணங்களையே உடையவன்), என்றும் ப்ரமாணங்கள் அறுதியிடுவதால், சம்சாரி ஜீவர்கள், தான் ஒன்று செய்யாதிருக்க, அவர்களை சாஸ்த்திர விஹித விரோத செயல்களில் பரமனே ஈடுபடுத்தி ஸுக துக்கங்களை அளிக்கிறான், என்பது அநுபபன்னம் ; சம்சாரி ஜீவர்களின் பகவத் அதீன கர்த்ருத்வ விஷயத்தில், சாஸ்த்திர விவரணங்களைத் தெளிய வேண்டும் ; பரதந்த்ரனான ஜீவன் செய்ய வேண்டிய செயல்கள் அனைத்தும் ஐவரால் செய்யப் படுகின்றன என்று விளக்குகிறான் ஸர்வேஸ்வரனான கண்ணன், பகவத் கீதை (18-14) ஸ்லோகத்தில்.

***அதிஷ்டானம் ததா கர்தா கரணம் ச ப்ருதக் விதம். விவிதாஸ்ச ப்ருதக் சேஷ்டா தைவம் சைவாத்ர பஞ்சமம்***

அதாவது,

‘ஸகல செயல்களுக்கும் காரணங்கள் ஐந்து :

# ***ஆத்மா***

# ***உடல்*** (கர்ம அநுகுணமாக த்ரிகுண பரிணாமமாக பகவானால் அளிக்கப் பட்டது)

# ***இந்த்ரியங்கள்*** (கர்ம அநுகுணமாக த்ரிகுண பரிணாமமாக பகவானால் அளிக்கப் பட்டது)

# ***ப்ராணன்*** (கர்ம அநுகுணமாக பிறப்பு இறப்பு பகவானால் நிச்சயிக்கப் படுகிறது)

# ***பரமாத்மா***

- என்கிறான் கண்ணன்.

ஆக, பரதந்த்ரனான ஜீவனுக்கு, ஸர்வமும் பகவத் அதீமாகிறது.

# ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில், (3-27)

***ப்ரக்ருதே: க்ரியமாணாநி குணை: கர்மாணி ஸர்வஸ: அஹங்காரவிமூடாத்மா கர்தாஹமிதி மந்யதே***

என அருளினான்.

அதாவது,

சம்சாரி ஜீவர்களின் சரீரமானது மூன்று குணங்களாகிய ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் உடைய ப்ரக்ருதி என்ற அசேதந தத்வத்தினால் ஆனது. ஆக, சம்சாரி ஜீவர்களின் எண்ணமும் செயல்களும், அந்த குணத்திற்கு ஏற்ப அமைகிறது.

இவ்விஷயத்தில், ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில், (9-8)

***ப்ரக்ருதிம் ஸ்வாம் அவஷ்டப்ய விஸ்ருஜாமி புந: புந: பூதக்ராமம் இமம் க்ருத்ஸ்நம் அவஸம் ப்ரக்ருதே: வஸாத்***

என அருளினான்.

அதாவது,

என்னுடைய மூல ப்ரக்ருதியைத் துணையாக்கி, ப்ரக்ருதியின் வசத்தால், பராதீனமான தேவ-மனுஷ்ய-த்ரியக்-தாவர சரீரம் கொண்ட சம்சாரி ஜீவர்களை, திரும்ப திரும்ப அவ்வாறு படைக்கிறேன்.

இவ்விஷயத்தில், மேலும், ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில், (9-10)

***மயா அத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம் ஹேதுநா அநேந கௌந்தேய ஜகத் விபரிவர்ததே***

என அருளினான்.

அதாவது,

ஸத்ய ஸங்கல்பனான நான், என் அதீனத்தில் ப்ரக்ருதி பரிணானமான ப்ரபஞ்சம், உண்டாகக் கடாக்ஷிக்கிறேன் ; அவரவர்களுக்கும், கர்ம அதீனமாக பெறும் தேவ-மனுஷ்ய-திரியக்-தாவர சரீரங்கள், என்னால் அளிக்கப் படுகிறது ; குந்தி மகனே, இந்த ஹேதுவால் உலகமே சுழல்கிறது.

# மேலும், ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில், (16-19)

*__தாநஹம் த்விஷத: க்ருராந்ஸம்ஸாரேஷு நராதமாந் க்ஷிபாம்யஜஸ்ரமஸுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு__*

என அருளினான்.

அதாவது,

என்னை வெறுப்பவர்களாக, ஈஸ்வரனை இல்லை ஆக்கும் கொடியோர்களை, என்னை பற்றி சிந்திக்காமல் சம்சார ஸுகத்தில் மட்டும் ஈடுபடுபவர்களை, நான் கடுமையாகத் தண்டிக்கிறேன் ; ஆஸுர யோனியில் பிறக்க செய்கிறேன்.

ஆக, அத்யந்த பரதந்த்ரனான ஜீவனுக்கு, ஸர்வமும் பகவத் அதீனமாகிறது ; அப்படியென்றால், ஸ்வ அதீனமற்ற செயலினால், பாப புண்யங்கள் எவ்வாறு சம்சாரி ஜீவர்களுக்கு சம்பவிக்கக் கூடும், என்பதற்கு விளக்கங்களை ப்ரமாணம் கொண்டே தெளிய வேண்டும்.

5. சாஸ்த்திர விதிகளின் படி :

# கர்ம மீமாம்ஸை வரி :

*__சாஸ்த்திர பலம் ப்ரயோக்தரி__*

அதாவது, சாஸ்த்திரம் விதித்த கர்மாக்களை அநுஷ்டிப்பவனுக்கே அதற்காக சொல்லப் படுகிற பாப புண்ய பலன்கள் ஸித்திக்கும். அதாவது, சாஸத்திர விதிகளை மீறும் போது பாபங்களும், சாஸ்த்திர விதிகளை பின்பற்றும் போது புண்யங்களும் ஸித்திக்கும்

# *__ந புக்தம் க்ஷீயதே கர்ம கல்ப கோடி ஸதைரபி__*

என்கிற சாஸ்த்திர விதிப்படி, கல்ப கோடி காலங்களானாலும், பாப புண்ய கர்மாக்கள் அநுபவியாமல் அழியாது.

# அடிக்கடி செய்யப் படும் பாபகானது, அறிவை மழுங்க அடிக்கும்; அதனால் அவன் மீண்டும் மீண்டும் பாபச் செயலையே செய்வான், என்கிறது சாஸ்த்திரம். மஹா பாரத வரியாவது :

*__பாபம் ப்ரக்ஞாம் நாஷயதி க்ரியமாணாம் புந: புந: நஷ்ட ப்ரக்ஞ: பாபமேவ புநராபதே நர:__*

அதாவது, பாபம் அறிவை அழிக்கும் ; அந்த வாசனை மீண்டும் பாபச் செயலை தூண்டும் என்றாகிறது.

# ஸர்வேஸ்வரனான கண்ணன், சாஸ்த்ரத்தை அடியொற்றியே நடக்க வேண்டும் என வலியுருத்துகிறான் இந்த பகவத் கீதை (16-24) ஸ்லோகத்தில்.

*__தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்ய அகார்ய விவஸ்திதௌ. க்ஞாத்வா சாஸ்த்ர விதானோக்தம் கர்ம கர்தும் இஹ அர்ஹஸி__*

அதாவது, 'தர்ம சாஸத்ரத்தில் விதித்தபடி 'எது எவ்வாறு செய்ய தக்கது' மற்றும் 'எது செய்யத் தகாதது' என்பதை அறிந்து அதற்கேற்ப செயல் படவேண்டும்'.

ஆக, பரதந்த்ரனான ஜீவனுக்கு, சாஸ்த்திர வச்யதை உண்டு என்பது தெளிவு.

# முண்டகோபநிஷத்,

*த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமானம் வ்ருக்ஷம் பரிஷ்ஸ்வஜாதே தயோர் அன்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி அனச்னன் அன்யோ அபிசாகசீதி*

என்கிறது. அதாவது, 'ஜீவன் மற்றும் பரமாத்மா என்கிற இரு பறவைகள் ஒரே மரத்தில், அதாவது ஒரே உடலில், இருக்கின்றனர். இயற்கையில், எட்டு விதமான குணங்களினால் ஒன்று பட்டவர்களாக இருவரும் இருக்கின்றனர். இருவரும் நண்பர்களைப் போல் இருக்கின்றனர். அதில் ஒரு பறவை (சம்சாரி ஜீவன்) மரத்தில் உள்ள பழங்களை (உடல் ரீதியான கர்மாவினால் ஏற்படும் ஸுக துக்கங்களை) அநுபவிக்கிறது. மற்றொறு பறவை (பரமாத்மா) அத்த பழத்தை சுவைக்காமல் (கர்மாவினால் வரும் ஸுக துக்கங்களை அநுபவியாமல்) மிகப் பொலிவுடன் திகழ்கிறது.

ஆக, பரதந்த்ரனான ஜீவனுக்கு, சாஸ்த்திர வச்யதை உள்ளபடியால், அவனுடைய விஹித விரோத செயல்களால், பாப புண்யங்கள் சம்பவிக்கிறது, என்பது தெளிவு.

கர்மாக்களான புண்யம் மற்றும் பாபம் என்ற சொல்லின் விளக்கம்:

***புண்யமாவது*** இந்த ஜீவர்கள் செய்யும் சாஸ்த்ர விதிப்படி உள்ள செய்கையால் ஸர்வேஸ்வரனான கண்ணனுக்கு ஏற்படும் சந்தோஷம்; அதன் விளைவாக ஏற்படும் அநுகூலங்கள்

***பாபமாவது*** இந்த ஜீவர்கள் செய்யும் சாஸ்த்ர விதிக்கு மாறாக உள்ள செய்கையால் ஸர்வேஸ்வரனான கண்ணனுக்கு ஏற்படும் சீற்றம்; அதன் விளைவாக ஏற்படும் ப்ரதிகூலங்கள்.

# உபநிஷத் சாரமான, வேத வ்யாஸரால் அருளப் பெற்ற,

***கர்தா சாஸ்த்ரார்த்தவத்வாத்; பராத் து தச்ருதே***

என்ற ப்ருஹ்ம ஸூத்ரங்களுக்கு ஸ்ரீராமானுஜர், ஜீவர்கள்  செயல் புரியும் தன்மை உடையவர்கள் என்றும், ஆனால் ஜீவர்கனின் செயல் புரியும் தன்மை ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் ஆதிக்கத்தில் உள்ளது என்றும் விளக்கம் அளித்துள்ளார்.

ஆக, பரதந்த்ரனான ஜீவனுக்கு, சாஸ்த்திர வச்யதை உள்ளபடியால், பாப புண்யங்கள் சம்பவிக்க, ஸ்வதந்த்ரமாக செயல் புரியும் தன்மை உண்டு என்பது தெளிவு ; அப்போது தான் பாப புண்யங்களுக்கு அவன் அர்ஹனாவான்.

# இந்த சம்சாரி ஜீவ கர்த்ருத்வத்தில் உள்ள ஸ்வாதந்த்ரியம் எத்தகையது என்னில்,

***க்ருத ப்ரயத்ந அபேக்ஷ: து விஹித ப்ரதிக்ஷித்தா வையர்ய்யாதிப்ய:***

என்கிற ***ப்ருஹ்ம ஸூத்ரமாவது*** (பராயத்தாதிகரணம்), விதி நிஷேத சாஸ்த்திரங்கள் வீணாகக் கூடாது என்பதால், ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஜீவனுக்கு ஸ்வாதந்த்ரியம் உண்டு என்கிறது.

# ஆக, ***தைவம் சைவாத்ர பஞ்சமம்*** என்கிற கண்ணனின் கீதோபதேச வரிக்கு, பகவத் க்ருத்யம் ஐந்து ப்ரகாரங்களில் இருக்கிறது, என்றபடி.

***காரயிதா*** - சம்சாரி ஜீவர்களின் சரீரம், புலன்கள் போன்றவைகளை, அவரவர்களின் பாப புண்ய கர்மாக்களின் அடிப்படையில், இயங்கச் ***செய்விப்பவன்***.

***கர்தா*** - சம்சாரி ஜீவர்களுக்கு சரீர சம்பந்தத்தைக் கொடுத்து, அவர்களது செயல்களுக்கேற்ற பலனை அளித்து, செயல்களைச் ***செய்பவன்***.

*உபேக்ஷகன்* - சம்சாரி ஜீவர்களின் ப்ரதம ப்ரவ்ருத்தியில் உள்ள முயற்சிகளை (நல்லது அல்லது கெட்டது என்று) *விலக்காதவன்* ; இது சம்சாரி ஜீவர்களுக்கு, பாப புண்ய பல ஹேதுவாகிறது.

*அநுமந்தா* - அதனால், சம்சாரி ஜீவர்களின் செயல்களை ஸ்வதந்தரமாக தொடங்க *அநுமதிப்பவன்*.

*ஸஹகாரி* - செயல்களில் சம்சாரி ஜீவர்கள் ஈடுபடும் போது, தான் பெரும் பகுதியை ஏற்று அந்த செயல்களுக்கு முன்னேற்றம் கொடுத்து *உதவி புரிபவன்*.

6. ஆக, பரதந்த்ர ஜீவனின் க்ரியைகளை, சாஸ்த்திரங்கள் நிஷேதிக்கிறதா ?

# இதிஹாஸ சமுச்சய வரிகளைக் கொண்டு பார்க்கும் போது,

***ஸ்வயம் ம்ருத் பிண்ட பூதஸ்ய பரதந்த்ரஸ்ய தேஹிந: ஸ்வ ரக்ஷணேபி அஸக்தஸ்ய கோ ஹேது பர ரக்ஷணே***

அதாவது

அத்யந்த பாரதந்திரிய ஸ்வரூபத்தை உடைய, மண் கட்டி போல் இருக்கும், ஸம்ஸாரி ஜீவனுக்கு தன்னை ரக்ஷித்துக் கொள்ளவே தகுதி இல்லாத போது பிறர்களை எப்படி ரக்ஷிப்பான் என அர்த்தமாகிறது.

# சாஸ்த்திரங்கள்,

***தேன வினா த்ருணம் அபி ந சலதி***

என்கிறது; அதாவது, அவன் அன்றி ஒரு புல்லும் அசையாது.

# அதனால், *ஜீவ க்ருத்யம் பகவத் அதீனம்* என்பதன் தாத்பர்யத்தை உணர வேண்டும். ஸகல உபநிஷத் ஸாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில் (9-27)

***யத் கரோஷி யத் அஷ்னாஸி யஜ்ஜுஹோஷி ததாஸி யத். யத் தபஸ்யஸி கௌந்தேய தத் குருஷ்வ மதர்பணம்***

என அருளினான் ; அதாவது, 'அர்ஜுனா ! நீ செய்யும் அனைத்து லௌகீக வ்யாபாரங்களையும் மற்றும் வைதீக கர்மாக்களையும் என்னிடத்தில் அர்ப்பணம் செய்.' எனக் கண்ணனால் சொல்லப் பட்டிருக்கிறது.

ஆக, பகவத் அர்ப்பணமாகிய, ஸாத்வீக த்யாகம் என்பது *பராதீன பரார்த்த கர்த்ருத்வ போக்த்ருத்வத்தை உடைய ஜீவர்களின்* அனைத்து சாஸ்த்திர விஹித செயல்களுக்கும் பொருந்தும்.

இதனாலேயே, ஸகல விதமான விஹித க்ரியைகளைச் செய்து விட்டு *ஸ்வஸ்மை ஸ்வப்ரீதயே ஸ்வயமேவ காரிதவான்* என்கிற ஸாத்வீக த்யாகத்தின் தேவையை சாஸ்த்திரங்கள் உரைக்கின்றன ; கண்ணனும் பகவத் கீதையில், (18-9)

***கார்யமித்யேவ யத் கர்ம நியதம் க்ரியதே அர்ஜுன. ஸங்கம் த்யக்த்வா பலம் சைவ ஸ த்யாக ஸாத்விகோ மத:***

என அருளினான் ;

அதாவது,

'சாஸ்த்திரம் விதித்த கர்மங்களை செய்து போவது ஜீவ க்ருத்யம் ; ஆனால், அதனை அநுஷ்டிக்கும் போது, 'தான் தனது' என்கிற எண்ணங்களைத் துறந்து, இந்த கார்மாவினால் வரும் பலன் எனதல்ல என்று

த்யாகம் செய்வது ஸாத்விக த்யாகமாகும் ; ஜீவர்களின் பகவத் அதீன கர்த்ருத்வ போக்த்ருத்வ செயல் - என்கிறான் கண்ணன்.

# ஆக, பரம காருணிகனான எம்பெருமான், சம்சாரி ஜீவர்களை இந்த சம்சார சுழற்சியிலிருந்து விடுபட, தன் திருவாக்கினாலே தானே அருளிச் செய்ததாவது :

பகவத் கீதையில் (9-33)

*பஜஸ்வ மாம்*

என்று தன்னை அடைவதற்கு உபாயமாக பக்தி யோகம் விதிக்கப் பட்டிருக்கிறது. பக்தி யோகத்தை அநுஷ்டிப்பதற்கு சக்தி இல்லாதவர்களைக் குறித்து

*மாம் ஏகம் சரணம் வ்ரஜ* (பகவத் கீதை 18-66)

என்று சரணாகதி விதிக்கப் பட்டிருக்கிறது.

# ஶ்ரீபாஷ்யம், அவிரோதாத்யாயம், தர்க்க பாதம், ***உத்பத்தி அஸம்வ்வாதிகரணத்தில்*** , ஶ்ரீ பாஞ்சராத்ர சாஸ்த்திரமும் ப்ரமாணமே, என அறுதியிடுகிறார், ஶ்ரீ ராமானுஜர் ; பாஞ்சர்த்ர சாஸ்த்திரமானது,

***ஸர்வக்ஞோபி விச்வேச: ஸதா காருணகோபி ஸந். சம்சார தந்திர வாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே***

என்கிறது; அதாவது, கருணை உள்ளம் கொண்ட ஸர்வக்ஞனான எம்பெருமான், இந்த சம்சாரத்தை நடத்தும் பொருட்டு, சாஸ்த்திர விதிப்படி, சம்சாரி ஜீவர்களிடம் ரக்ஷண ப்ரார்த்தனையை, எதிர் பார்த்து பலனளிக்க காத்திருக்கிறான்.

***பக்த்யா பரமயா வாபி ப்ரபத்யாவா மஹாமதே I ப்ராப்யோஹம் ந அந்யதா ப்ராப்ய: மம கைங்கர்ய லிப்ஸுபி:***

என்று பாஞ்சராத்ர சாஸ்த்திர ஸம்ஹிதையில் ஶ்ரீயப்பதியான எம்பெருமான் தானே மிகத் தெளிவாக அருளிச் செய்துள்ளபடி ; அதாவது, பரமபதத்தில் என்னை அடைந்து எனக்கு கைங்கர்யம் செய்ய விரும்புவர்கள் ***பக்தி யோகத்தை*** செய்தாவது அல்லது ***சரணாகதியை அநுஷ்டித்தாவது*** என்னை அடைய வேண்டும். இந்த இரண்டு வழிகளை தவிர வேறு வழியால் என்னை அடைய முடியாது.

# ஸர்வேஸ்வரனான கண்ணன், பகவத் கீதையில் (9-24)

***அஹம் ஹி ஸர்வ யஞானாம் போக்தா ச ப்ரபுரேவ ச ந து மாம் அபிஜாநந்தி ததத்வேந அத: தே ச்யவந்தி தே***

என அருளினான்.

அதாவது,

நான் அன்றோ, ஸர்வ கர்மாக்களால் ஸமர்ப்பிக்கப் படும் ஹவிஸை ஏற்று பலனளிக்கிறேன் ; என்னை இவ்வாறு உள்ளபடி அறிகிறார்கள் அல்லர் ; ஆகையால் அவர்கள் அற்ப பலனைப் பெற்று அதையும் இழக்கிறார்கள்.

ஆக, பரதந்த்ரனான ஜீவர்களிடம், சாஸ்த்திரம் விதித்த வகையிலே செயல்களை எதிர்பார்த்து, பரம காருணிகனான கர்மானுகுண பல ப்ரதனான ஸர்வேஸ்வரன், பலனளிக்கிறான் என்பது திண்ணம் ; உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளின ப்ருஹ்ம ஸூத்ரத்தில்

*__விஹிதத்வாத் ச ஆஸ்ரம கர்மாபி__*

என்கிறார்.

அதாவது, இதை ஶ்ரீபாஷ்ய உரையில், ஸர்வேஸ்வரனுடைய ஆணையால் அனைவரும் ஆக்ஞா கர்மாக்களை அநுஷ்டிக்க வேண்டும், என்று கூறப்படுகிறது ; அதனால், விதி நிஷேதங்களை பின்பற்றாமல் போனால், பாப புண்ய ரூபமான ஸுக துக்கங்களுக்கு ஹேதுவாகும் என்றாகிறது.

# ஆக, ஜீவனானவன் பராதீன பரார்த்த கர்த்ருத்வ போக்த்ருத்வத்தை உடையவன், என்பது ப்ரமாண ஸித்தம் ; ஸர்வமும் பகவத் அதீனம் என்பது சாஸ்த்ரீயம்.

ஆனால், கர்ம அநுகுண பல ப்ரதனான ஸர்வேஸ்வரன், சம்சாரி ஜீவர்களுக்கு ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஸ்வாதந்த்ரியத்தை அளித்து, சாஸ்த்திரம் மூலமாக விதி நிஷேதங்களை தெளிவித்து, ஸர்வ பல ப்ரதத்வத்தை தானே கொண்டு, ஜகத் வ்யாபாரத்தை செய்து போகிறான், என்பது சாஸ்த்திர ப்ரமாண ஸித்தம் ; ஆக, சாம்சாரிக ஸுக துக்கங்களை அளிக்க, தன் இச்சையினால், சம்சாரி ஜீவர்களை விதி நிஷேதங்களில் தூண்டுவித்து பலனளிக்கிறான், என்பது சம்சய, விபர்யய, அந்யதா ஞான விஷயம்.

ஸர்வேஸ்வரன் கர்மாநுகுண பல ப்ரதன் ; ஜீவர்கள் விஷயத்தில் பரம காருணிகன் ; பகவத் ராமாநுஜ க்ரந்தங்களும் இதையே தெளிவிக்கிறது ; அதற்கு விரோதமாக, ஒரு சில ப்ரமாண வரிகளைக் கொண்டு மற்றவற்றைக் கை விட்டு, 'விதி மற்றும் விதி விலக்கு' போன்ற விபரீத வ்யாக்யான வசனங்கள் முற்றிலும் அசாஸ்த்ரீயம் ; பூர்வாசார்யர்களின் விளக்கங்களை மீறிய யுக்தி வாதம் ; ஆக அவை அநுபாதேயம்.

*__ந தைவம் தேசிகாத் பரம்__*

*__தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்__*

******

12.7.2023
புதன் கிழமை

*__நீ மற்றும் நான் என்பதில் அஹமர்த்தம் - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்__*

1. ஸ்வாமி தேசிகனின், *__தத்வ பதவீ__* என்னும் சில்லரை ரஹஸ்ய க்ரந்தம்,

*__சேதநமான அவர தத்வம் பரிசன்னமான அஹமர்த்தம் ; இதற்கு ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் பராயத்தங்களாய் இருக்கும்__*

என்கிறது ; அதாவது, ஜீவ தன்மைகளாவது, அளவில் சிறியதான நான் என்பதற்கு பொருளாகும் ; இதற்கு, அறிவுடைமை, செயல் புரியும் தன்மை உடைமை, பலனை அநுபவிக்கும் தன்மை எம்பெருமானுக்கு அதீனமாக இருக்கும்.

# இதனை, தத்வ த்ரயமாக,

*__சேதந__*

*__அசேதந__* மற்றும்

*ஈஸ்வரன்*

என்ற மூன்று தத்வங்களையும் வைதீக ப்ரமாணங்களை கொண்டு

*ஸ்வாதீன த்ரிவித சேதநா அசேதந ஸ்வரூப ஸ்திதி ப்ருவ்ருத்தி பேதம்*

என்ற ப்ராமாணிகமாக விளக்கி அருளியிருக்கிறார் ஶ்ரீராமானுஜர் ; அதாவது

*மூன்று வித சேதனர்கள்* (பத்தர், முக்தர், நித்யர்) மற்றும்

*மூன்று வித அசேதன வஸ்துக்களின்* (ப்ரக்ருதி, காலம், சுத்த ஸத்வம்)

இருப்பு, வாழ்வு மற்றும் செயல்களை (ஸ்வரூப, ஸ்திதி, ப்ரவ்ருத்தி)

தன் ஆளுகைக்கு கீழ் கொண்டுள்ள *ஸ்வதந்தரனான ஸர்வேஸ்வரன்* ,

என அருளியுள்ளார்.

2. ச்வேதாஸூதர உபநிஷத்

*நித்யோ நித்யானாம் சேதனஷ் சேதனானாம்ஏகோ பஹூனாம் யோ விததாதி காமான். தத் காரணம் ஸாங்க்யயோகாதிகம்யம் ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாஷை:*

என்கிறது.

அதாவது, அழிவற்ற பல சேதனனர்களுக்கு (ஜீவர்களுக்கு) அழிவற்ற ஒரு பரம சேதனனாகிய எம்பெருமான் ஸகல பலன்களையும் கொடுத்தருள்கிறான்.

ஆக, *நானே அவன் ; அவனே நான்* என்கிற ஜீவ ஈஸ்வர ஐக்கியம் பொருந்தாது.

# ஶ்ரீமத் ராமாயணத்தில், ஶ்ரீராம தூதனாக சிறிய திருவடியான ஹனுமான், லங்கையை அடைந்து ஸீதா பிராட்டியைக் கண்டு, தான் ஶ்ரீராம தூதன் என விண்ணப்பிக்கிறார்.

அப்போது, பிராட்டியானவள்,

*வாநராணாம் நராநாஞ்ச கதமாஸீத் ஸமாகம:?*

என வினவுகிறாள். அதாவது வனரனான ஸுக்ரீவனுக்கும் ஶ்ரீராமனுக்கும் எப்படி சேர்க்கை ஏற்பட்டது?

அதற்கு பதில் அளித்த ஹனுமான்,

*ராம ஸுக்ரீவ ஐக்யம் தேவி ஏவம் ஸமஜாயத*

என விளக்கலானார். அதாவது, ‘தேவி! ஶ்ரீராமனுக்கும் ஸுக்ரீவனுக்கும் கருத்து ஒற்றுமை இவ்வாறு ஏற்பட்டது’

ஆக, ஐக்யம் என்கிற பதம், பல வற்றில் வேற்றுமை உள்ள இடங்கிளில், ஒரு சில ஒற்றுமைகளை கூறுமே அன்றிக்கு, இரண்டறக் கலப்பதை அங்கு கூறுவது ஆகாது.

ஆக, ஐக்யம் என்கிற சொல் சில ஒற்றுமையை கூறும் இடத்திலும் வரும். அவ்வழியிலே, *நானே அவன் ; அவனே நான்* என்கிற ஜீவ ஈஸ்வர ஐக்கியம் பொருந்தாது.

3. ப்ருஹ்மத்தோடு ஸமமான நிலை முக்தன் பெறுகிறான், என்பது ப்ரமாண ஸித்தம்.

# ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில் (14-2), மோக்ஷ ஸாதநமாக பக்தி யோகத்தின் பலனை விளக்குகிறான்:

***இதம் ஞானம் உபாஸ்ரித்ய மம ஸாதர்ம்யம் ஆகதா: ஸர்கேபி நோபஜாயந்தே ப்ரலயே ந வ்யதந்தி ச***

அதாவது, உண்மையான ஞானம் பெற்று மோக்ஷத்திற்கான உபாயமாகிற பக்தி யோகத்தை அநுஷ்டித்து அவனை அடைந்தவர்கள் அவனுக்கு ஸமமான நிலையை அடைகிறார்கள் (ஆனந்தத்தை பெறுகிறார்கள்) என்கிறான் பகவான்.

# முண்டகோபநிஷத் வரிகளாவது,

***யதா பஷ்யத பஷ்யதே ருக்ம வர்ணம் கர்தாரமீசம் புருஷம் ப்ருஹ்ம யோநிம். ததா வித்வான் புண்யபாபே விதூய நிரஞ்சன: பரமம் ஸாம்யம் உபயிதி***

அதாவது, உபாஸகனுக்கு எப்போது ஜகத் காரணனான, அதி ஸுந்தர திருமேனி உடையவனான வாஸுதேவனைக் காண்கிறானோ அப்போதே புண்ய பாப கர்மங்களை உதரிவிட்டு பகவானுக்கு ஸாம்ய நிலையைப் பெறுகிறான்.

# வேத வ்யாஸரால் உபதேசிக்கப் பட்ட, உபநிஷத் விளக்கமான, ப்ருஹ்ம ஸூத்ரத்தில்

***போக மாத்ர ஸாம்ய லிங்காஸ்ச*** - (ப்ருஹ்ம ஸூத்ரம் 4ம் அத்யாயம் 4ம் பாதம் 6வது அதிகரணம் 21ம் ஸூத்ரம்)

எனக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது,

'மோக்ஷத்தை அடைந்த முக்த ஜீவர்களுக்கு பரிபூர்ண ப்ருஹ்மானுபவம், எம்பெருமானுடன் ஒக்க, போகத்தில் மட்டுமே' என்பதை விளக்கப் படுகிறது.

4. ஜீவ பஹுத்வம் சாஸ்த்திரத்தில் சொல்லப் பட்டிருக்கிறது ; ஆனால் ஸகல ஜீவர்களும் ஒரே தன்மை உடையாவர்கள் என்பதனை, ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீநையில் (5-18) தெளிவிக்கிறான் :

***வித்யா விநய ஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி ஸுநி சைவ ஸ்வபாகே ச பண்டிதா: ஸமதர்ஸிந:***

அதாவது,

ஆத்ம ஞானம் பெற்றவனிடத்திலும், விநயமுடையவனிடமும் நன்கு கற்ற ப்ராஹ்மணனிடத்திலும், பசுவினிடத்திலும், யானையினிடத்தும், நாயினிடத்தும், நாயைத் தின்னும் புலையனிடத்தும், ஆத்மா ஒரே தன்மை உடையதாக பண்டிதர் சமப் பார்வை உடையவராவர்.

# ஜீவனின் ஸ்வரூப நிரூபக தர்மங்களை ***தத்வ த்ரய சிந்தனாதிகாரத்தில்*** ஸ்வாமி தேசிகன் அருளியுள்ளார் :

***ஆகையால், ஜீவ ஸ்வரூபத்தை ஞானத்வம், ஆனந்தத்வம், அமலத்வம், அணுத்வம் இத்யாதிகளான நிரூபக தர்மங்களையிட்டு நிரூபித்து ஞானம், ஆனந்தம், அமலம் அணு என்று இம்முங்களாலே சொல்லக்கடவது***

ஜீவனை மகார வாச்யனாக சாஸ்த்திரங்கள், கூறுகின்றன :

# கடோபநிஷத் கூறும் போது,

*__அகாரேண உச்யதே விஷ்ணு: ஸர்வ லோகேச்வரோ ஹரி: உத்ருதா விஷ்ணுனா லக்ஷ்மி: உகாரேணோவுச்யதே ததா. மகாரஸ்து தயோர் தாஸ: இதி ப்ரணவ லக்ஷணம்__*

என்று

*__அ__* என்பதால், ஸர்வ லோகங்களுக்கும் ஈஸ்வரனாகிய விஷ்ணு சொல்லப் படுகிறான்; *__உ__* என்பதால் பகவானோடு சேர்ந்தே இருக்கும் பெரிய பிராட்டியான மஹா லக்ஷ்மி சொல்லம் படுகிறாள்; அந்த திவ்ய தம்பதிகளுக்கு *__ம__* என்பதால் சொல்லப் படுகிற ஜீவன் தாஸனாகிறான், என்பது ப்ரணவத்தின் விளக்கும், எனப் பொருளாகிறது.

# தத்வ சாகர ஸம்ஹிதையில் விளக்கப் படுவதாவது :

*__ஆத்மா ஸ து மகாரோயம் பஞ்சவிம்ச: ப்ரகீர்த்தித:__*

இந்த *__ம__* கார வாச்யனனான ஜீவனை ப்ரமாணம் 25வது தத்வம் என்கிறது.

# மகார வாச்யனான ஜீவ லக்ஷணம் அதனுடைய தாதுக்களால் அறியலாம்:

*__ம__* காரத்தின் தாதுக்காளாலே

*__மன ஞானே__* - என்பதால் ஞானமாய் இருப்பது

*__மன அவபோதனே__* - என்பதால் ஞானத்தை குணமாய் உடையது

*__மஸ பரிமாணே__* - என்பதால் அணு ஸ்வரூபன்

என்பதாகும்.

ஆக, ஜீவர்கள் பலர் ஆனாலும், ஜீவர்களின் ஸ்வரூப நிரூபக தர்மங்கள் ஒன்றே ; ஆக, ஜீவர்களை ப்ரமாணங்கள் குறிப்பிடும் போது அது 'ஏக வசனத்தில்' இருப்பதை *__ஜாத்யேக வசனம்__* எனக் கொள்ள வேண்டும். உதாரணமாக, 'தேவரீர் க்ருஹத்தில் உபயோகிக்கிற அதே அரிசி தான் அடியேன் க்ருஹத்திலும் உபயோகிக்கிறோம்' என்பதில் அரிசி என்பது 'ஏக வசன' சப்தமாயினும், அது அரிசியின் பஹுத்வத்தை மறுக்காத போது, அதை *__ஜாத்யேக வசனம்__* என்பதுண்டு.

5. ஈஸ்வர தத்வமான, அந்த ப்ருஹ்ம ஸ்வரூபத்தின் *__ஸ்வரூப நிரூபக தர்மம்__* தைத்ரீய உபநிஷத் சொல்லுகிற,

*__ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ருஹ்ம; ஆனந்தம் ப்ருஹ்ம; அமலம் ப்ருஹ்ம__* என்றும் *__ஹ்ரீஸ்சதே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ__*

என்பதால், ப்ருஹ்மம் (ஈஸ்வர தத்வம்) அறியப் படுகிறது.

அதாவது, அந்த ப்ருஹ்மம் - மூன்று வித சேதநர்களையும் மற்றும் மூன்று வித அசேதநங்களையும் ஆளும் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன்.

சாஸ்த்திரம் கொண்டு அறிய வேண்டிய *__ப்ருஹ்ம ஸ்வரூபம்__*

*__ஸத்யத்வம்__* (மாறுதலற்றது)

*__ஞானத்வம்__* (அறிவு கொண்டது),

*__அனந்தத்வம்__* (அனைத்திலும் வ்யாபித்திருப்பது),

*__ஆனந்தத்வம்__* (இன்பமயமானது) மற்றும்

*__அமலத்வம்__* (குற்றமற்றது)

*__ஶ்ரீயப்பதித்வம்__* (பெரிய பிராட்டியுடன் கூடியே இருப்பது)

இதுவே ஈஸ்வர இலக்கணம்.

# சேதந அசேதந விசிஷ்டனான ஸர்வேஸ்வரனுக்கு *__ஜகத் காரணத்வம்__* லக்ஷணமாகக் கூறப்படுகிறது. தைத்ரிய உபநிஷத்தில் கூறப்படும் சேதந அசேதந விசிஷ்டனான ஸர்வேஸ்வரனுக்கான இலக்கணமாவது :

*__யதோவா இமானி  பூதானி ஜாயந்தே யேன ஜாதானி ஜீவநதி யத் பிரயந்த்ய பி சம்விசந்தி தத் விஜிஜ்ஞாஸ் ஸ்வ தத் ப்ரஹ்மேதி__*

அதாவது,

எவனிடமிருந்து இந்த லோகங்கள் உண்டாகிறதோ, எவனால் அவை காக்கப் படுகிறதோ, எவனிடத்தில் அவை லயத்தை அடைகிறதோ அவனே ஸர்வேஸ்வரன்.

# இதையே, உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய *__ப்ருஹ்ம ஸூத்ரம்__*

*__ஜன்மாத்யஸ்ய யத:__*

அதாவது,

உலகம் எவனிடம் இருந்து உண்டாகிறதோ அவன் ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா).

# ஒரு உற்பத்திக்கு மூன்று காரணங்கள் உள்ளன.

*__உபாதான காரணம்__* : மூலப் பொருள்  (Raw Material cause) - இந்த காரணமான மூலப் பொருளாவது காரிய பொருளாக மாறுகிறது.

*__நிமித்த காரணம்__* : நிபுணர் (Expert Cause) - மூலப் பொருளை காரிய பொருளாக மாற்ற ஒரு நிபுணரின் தேவை ஏற்படுகிறது.

*__ஸஹகாரி காரணம்__* : ஆதரவு (Support Cause) - மூலப் பொருளை காரிய பொருளாக மாற்ற ஒரு கருவி தேவையாகிறது.

உதாரணமாக,

ஒரு பானை இருந்தால் அது உண்டாவதற்கு மண் என்று ஒரு வஸ்து இருக்க வேண்டும்.

மண்தான் பானைக்கு உபாதான காரணம்.

ஆனால் மண் எப்படிப் பானையாக ஆகும்?

தானே அது ஒன்று சேர்ந்து பானையாகுமா?

குயவன்தான் மண்ணைப் பானையாகப் பண்ண வேண்டியிருக்கிறது.

மண்ணினால் ஒரு பானை உண்டாக வேண்டுமானால் அதற்குக் குயவன் என்ற காரணமும் வேண்டியிருக்கிறது.

குயவன்தான் நிமித்த காரணம்.

குடத்தை, மண்ணை வைத்துச் சுழற்ற ஒரு சக்கரமும், அதைச் சுற்றிவிட நீண்ட கொம்பும் தேவை. இந்த கருவி தான் உதவுகின்ற காரணங்கள்;

அந்த கருவி ஸஹகாரி காரணம்.

# இந்த ப்ரபஞ்ச உற்பத்திக்கு, ப்ரஹ்மமேதான் (ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனே), உபாதான, நிமித்த, ஸஹகாரி காரணங்களாக இருக்கிறான்.

ப்ரஹ்மத்தின் சரீரமாக இருக்கும் சேதநம் மற்றும் அசேதநம், அதாவது மூலப் ப்ரக்ருதி மற்றம் சம்சாரி சேதநர்கள், இவ்வுலகமாகவும் ப்ராக்ருத சரீர சம்பந்ததோடு கூடிய சேதநர்களாகவும் விரிவடைகிறது.

அந்த ப்ருஹ்மமே ஜகத் ஸ்ருஷ்டிக்கு காரணமாகிறது.

ஆகையால், *ப்ரஹ்மமேதான் உபாதான காரணம்*

இதனால் அறிய வேண்டுவதாவது, ப்ருஹ்மத்தின் ஸ்வரூபத்தில், ஸ்ருஷ்டி தசையில் மாறுதல் ஏற்படாது;

விசிஷ்ட ப்ருஹ்மமான, அதாவது சேதந அசேதநங்களை தனக்கு சரீரமாக க் கொண்ட ப்ருஹ்மம், மாறுதலை அடைகிறது.

அதாவது, ஸூக்ஷ்ம சேதந அசேனங்களை தனக்கு சரீரமாகக் கொண்ட ப்ருஹ்மம், ஸ்தூல சேதந அசேனங்களை தனக்கு சரீரமாகக் கொண்ட ப்ருஹ்மம் ஆகிறது.

இவ்வுலகத்தைப் படைக்க வேண்டும் என்று பகவான்தான் உறுதி கொள்கிறார். அந்த ஸங்கல்பமே ஜகத் ஸ்ருஷ்டிக்கு காரணமாகிறது.

ஆக, *அவனே நிமித்த காரணம்*

பெருமானுடைய சிறந்த பண்புகளைக் கொண்டுதான் (சக்திகளைக் கொண்டுதான்), இவ்வுலகை சிருஷ்டிக்க முடிகிறது.

ஆக, *பகவானேதான் ஸஹகாரி காரணம்*

6. இதனால் தெளிய வேண்டுவது :

# தத்வங்களில் *ஜீவ ஸ்வரூப ஸ்வபாவம்* எனப் படுவதாவது :

*ஜீவ ஸ்வரூபம்* **-** என்பது *ஜீவ இருப்பைக்* குறிப்பதாகும் ; அதாவது அததற்கே உரிய ஸ்வரூப நிரூபக தர்மங்களால் நிர்தாரிக்கப் பட்ட தன்மை. அதாவது, ஞானத்வம், ஆனந்தத்வம், அமலத்வம், அணுத்வம் ஆகியவைகளை உடையவை.

***ஜீவ ஸ்வபாவம்*** - என்பது ***ஜீவ இயல்பைக்*** குறிப்பதாகும் ; அறியும் தன்மைக்கு உதவுகிற தர்ம பூத ஞானத்தினுடைய ஏற்ற சுருக்கங்களால் உண்டாகும் நிலை ; அதாவது, பத்த தசையில் தர்ம பூத ஞானம் சுருங்கியும், முக்த தசையில் விகசித்தும் இருக்கும் தர்ம பூத ஞானம்.

# தத்வங்களில் ***ஈஸ்வர ஸ்வரூப ஸ்வபாவம்*** எனப் படுவதாவது :

***ஈஸ்வர ஸ்வரூபம்*** - என்பது ***ஈஸ்வர இருப்பைக்*** குறிப்பதாகும் ; அதாவது அததற்கே உரிய ஸ்வரூப நிரூபக தர்மங்களால் நிர்தாரிக்கப் பட்ட தன்மை. அதாவது, ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ருஹ்ம; ஆனந்தம் ப்ருஹ்ம; அமலம் ப்ருஹ்ம என்றும் ஹ்ரீஸ்சதே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ என்றும் உள்ளது.

***ஈஸ்வர ஸ்வபாவம்*** - என்பது ***ஈஸ்வர இயல்பைக்*** குறிப்பதாகும் ; எப்போதும் விகசித்து இருக்கும் தர்ம பூத ஞானம்.

# திரு அஷ்டாக்ஷர பொருளை விளக்கும் போது, ஸ்வாமி தேசிகன் அருளுவதாவது :

***அஹம் ஆத்மா ந தேஹோஸ்மி விஷ்ணு சேஷோ அபரிக்ரஹ: தமேவ சரணம் ப்ராப்த: தத் கைங்கர்ய சிகீர்ஷயா***

அதாவது, ***நான்*** என்கிற சொல் ஆத்மாவை குறிக்கும்; எனது சரீரத்தை குறிக்காது; ஸர்வேஸ்வரனுக்கு நான் அடிமைப் பட்டவன்; எனக்கு அடிமைப்பட்டது என்பது எதுவும் கிடையாது. நமக்கு அடிமைப் பட்டதாக இங்கு தோன்றும் அனைத்தும் சரீர சம்பந்தத்தினால். ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனை சரண் அடைந்திருக்கிறேன்; அவனுக்கு அடிமைத் தொழில் செய்வதற்காக.

ஆக, இந்த ப்ரகரணத்தில் ***அஹம்*** என்பதாவது, 'அஹமர்த்தமான ஜீவன்' என்கிறபடி.

# மோக்ஷத்திற்காக ஸர்வேஸ்வரனையே சரண் புகுந்து அதனால் செய்ய வேண்டிய சரணாகதி அநுஷ்டானத்தை இந்த பகவத் கீதை (18-66) ஸ்லோகத்தில் விளக்குகிறான் கண்ணன்.

***ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ. அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:***

அதாவது,

'மோக்ஷ ஸாதனமான அனைத்து நிவ்ருத்தி தர்மங்களையும் விட்டு என் ஒருவனையே சரணமாக பற்று. நான் உன்னை மோக்ஷத்திற்கு விரோதியான புண்ய பாபங்களிலிருந்து முற்றிலுமாக விடுவிக்கிறேன். சோகப் படாதே' - என்கிறான் கண்ணன் அர்ஜுனனிடம்.

ஆக, இந்த ப்ரகரணத்தில் ***அஹம்*** என்பதாவது, 'அஹமர்த்தமான ஈஸ்வரன்' என்கிறபடி.

7. பகவத் கீதை (10-21) ஸ்லோகத்தில் விளக்குகிறான் கண்ணன்.

***ஆதித்யாநாம் அஹம் விஷ்ணு ஜ்யோதிஷாம் ரவி: அம்ஸுமாந் மரீசி: மருதாம் அஸ்மி நக்ஷத்ராணாம் அஹம் ஸஸீ***

பன்னிரெண்டு ஆதித்யர்களில் நான் விஷ்ணு; ஒளிகளில் நான் கதிர்களுடன் கூடிய ஞாயிறு; நான் மருத்துக்களில் மரீசி; நக்ஷத்திரங்களில் சந்திரன் நான்.

சேதன அசேதன வஸ்துக்களுக்கும், ப்ருஹ்மத்துக்கும் உள்ள அப்ருதக் ஸித்த சம்பந்தமானது, பல உபநிஷத் வரிகளில், ***சாமானாதிகரண்யம்*** கொண்டு விளக்கப் பட்டிருக்கிறது ; அதனால், இந்த ஸ்லோகத்தில் உள்ள அனைத்து வஸ்துக்களும், பகவானுக்கு சரீரம் என்கிற சம்பந்தம் கூறிபடி.

# சமான விபக்தி (முதல் வேற்றுமை உருபு) கொண்டது ***சாமானாதிகரண்யம்***

சாமானாதிகரண்யம் முதல் வேற்றுமை உருபைக் கொண்ட இரு பதங்கள்.

*முதல் வேற்றுமை* அதாவது *ப்ரதம விபக்தி* - எழுவாய் வேற்றுமை

உதாரணம் : ***கண்ணன் கருப்பு*** - இரண்டு பதங்களுக்குமே முதல் வேற்றுமை உருபு கொண்டது.

இதனால் அறியப் படுவது கண்ணனின் நிறம் கருப்பு. கண்ணனுக்கும் கருப்பு நிறத்துக்கும் ஐக்கியம் ஸித்திக்காது, என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

# உபநிஷத் வரிகளில் பல, ஜீவ ப்ருஹ்ம விவரணத்தில், முதல் வேற்றுமை உருபைக் கொண்டிருக்கிறது.

உதாரணமாக :

***ப்ரக்ஞானம் ப்ரஹ்ம*** - (ரிக் வேதம் – ஐத்தரேய உபநிஷத்) - அதாவது, ‘உயர்ந்த ஞானம் ப்ரஹ்மம்’

***அஹம் ப்ரஹ்மாஸ்மி*** - (யஜுர் வேதம் -ப்ருஹதாரண்யக உபநிஷத்) - அதாவது, ’நான் ப்ரஹ்மம்’

***தத்வமஸி*** - (ஸாம வேதம் – சந்தோக்ய உபநிஷத்) - அதாவது ‘நீ அது’

***அயமாத்மா ப்ரஹ்ம*** - (அதர்வண வேதம் – மாண்டுக்யோபநிஷத்) - அதாவது, ‘ஆத்மா ப்ரஹ்மம்’

# இவ்விஷயத்தை ஸர்வேஸ்வரனுக்கும் ஜீவர்களுக்கும் உள்ள சரீர-ஆத்ம ஸம்பந்தம் கொண்டு தெளிய வேண்டும் ஏனெனில்,

ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில்,

***ய: ஆத்மநி திஷ்டந்; ஆத்மநே அந்தரோ; யம் ஆத்மா ந வேத; யஸ்ய ஆத்மா சரீரம்; ய: ஆத்மநி அந்தரோயமயதி ஏஷ த ஆத்மா அந்தர்யாமி அம்ருத:***

அதாவது,

யார் ஜீவாத்மாவுடன் இருக்கின்றானோ, யார் ஜீவாத்மாவுடன் உறைபவனோ, அப்படி தன்னுள் உறையும் யாரை அந்த ஜீவாத்மா அறிய மாட்டானோ, யாருக்கு ஜீவாத்மா சரீரமோ; யார் அந்த ஜீவாத்மாவை தன் இச்சைக்கேற்ப நியமிக்கின்றானோ, அந்த பரமான-ஆத்மா அந்தர்யாமி மற்றும் அழிவற்றவன்,

எனப்படுகிறது.

***சாமானாதிகரண்யம்*** புரிந்தால் தான், இவ்விஷயத்தில், ***சரீர- ஆத்ம சம்பந்தம்*** தெளிவாகும் ; அல்லது, சாந்தோக்யத்தில் உள்ள ***தத்வமஸி*** போன்ற வரிகளால், விபரீத அர்த்தம் தான் கிடைக்கும்.

ஆக, ***நீ மற்றும் நான் என்பதில் அஹமர்த்தம்*** எனப்படுவது, ஜீவ ஈஸ்வர ஸ்வரூப-ஸ்திதி-ப்ரவ்ருத்தி பேதங்களைக் கொண்டும், சாமானாதிகரண்யத்தினால் ஜீவ ஈஸ்வர சரீர-ஆத்ம சம்பந்தம் கொண்டும், ஜீவ பஹுத்வமும் ஈஸ்வர ஏகத்வமும் கொண்டும் தெளிய வேண்டும்.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

******

12.7.2023
புதன் கிழமை

*ஆத்ம ஞான சம்பாத்யத்தில் ஒரு சிறு விளக்கம் - விவாத மேடை தொடர் கேள்வி*

1. *மருத்தவர் மாநாட்டில்* , அநுபவம் மிக்க, மருத்துவ படிப்பை ஒரு சிறந்த மருத்துவ கல்லூரியில் கற்றவர், உரையாற்றுவதை எதிர் நோக்குகிறோம்.

*நீதிபதிகள் மாநாட்டில்* , அநுபவம் மிக்க, சட்ட படிப்பை ஒரு சிறந்த சட்ட கல்லூரியில் கற்றவர், உரையாற்றுவதை எதிர் நோக்குகிறோம். .

*பொறியாளர் மாநாட்டில்* , அநுபவம் மிக்க, தொழில் நுட்ப படிப்பை ஒரு சிறந்த தொழில் நுட்ப கல்லூரியில் கற்றவர், உரையாற்றுவதை எதிர் நோக்குகிறோம்..

*வர்த்தக கணக்காளர் மாநாட்டில்* , அநுபவம் மிக்க, வர்த்தக கணக்கு படிப்பை ஒரு சிறந்த வர்த்தக கல்லூரியில் கற்றவர், உரையாற்றுவதை எதிர் நோக்குகிறோம்.

ஆக, அழியும் தன்மை உடைய ஆரோக்யத்துக்கும், ஆஸ்திக்கும், லோக விஷய அறிவைப் பெறுவதற்கும், அநுபவம் மிக்க, சிறந்த *குரு பரம்பரை* (Structured Education) வழி வந்த அநுபவஸ்தரைக் கொண்டே, ஏற்கிறோம்.

ஆனால், அழியாத ஆத்மாவின் விஷயத்தில், ஒரு சிறந்த *குரு பரம்பரை* மூலமாக க்ரந்த காலக்ஷேபம் செய்து , ஞான சம்பாத்யம் உண்டாக வேண்டும் என்று ஏனோ பகுத்து அறியும் தன்மை கொண்ட மக்களின் மனம் கருதுவதில்லை ! இன்று, சொல் வன்மை உடையவர்களும், சிந்தனையாளர்களும்  ஆத்ம ஞானத்தை ப்ரவர்த்திக்கின்றனர்;  இதனால் விபரீத சாஸ்த்திர எண்ணங்களும் செயல்களும் உண்டாகும் எனக் கூட கேட்போர் நினைப்பதில்லை.

2. பல ப்ரகரணங்களை உள் அடக்கிய சாஸ்த்திர ப்ரமாணத்தில் (வேதம், உபநிஷத், புராணம், இதிஹாஸம், ஸ்ம்ருதிகள்), ஒன்றோடு ஒன்று முரண்படாத வகையில்,  ஆத்ம ஞான அர்த்த நிர்தேசம் பண்ண வேண்டுவதாகிறது.

# இது கடினம் என்பதனை, இதிஹாஸ ஸமுச்சயத்தில், வ்யாச மஹரிஷி,

*ஏகம் யதி பவேத் சாஸ்த்திரம் ஞானம் நிஸ்ஸம்சயம் பவேத் பஹுத்வாதிஹ சாஸ்த்ராணாம் ஞாநதத்வம் ஸுதுர்லபம்*

அதாவது, சாஸ்த்திரம் ஒன்றை மட்டுமே உரைப்பவையாக இருந்தால், எந்த விதமான ஐயமும் இன்றி அனைவருக்கும் சரியான ஞானம் உண்டாகும். ஆனால் சாஸ்த்திரங்கள்  பலவாக உள்ளதால் உண்மையான ஞானம் பெறுவது  மிகவும் கடினமான செயலாகும், என அருளியிருக்கிறார்.

3. இப்படிப்பட்ட கடினமான ஆன்மீக விஷயத்தை, பலரும் பல விதமாக மனம் போனபடி வர்ணிக்கும் நிலை, ஹிந்து தர்மத்தின் இன்றய அவல நிலை !

சிந்தித்து செயல்படுவதே மனித ஸ்வபாவம் !

ஆக,

*லக்ஷ்மி நாத சமாரம்பாம் நாத யாமுன மத்யமாம்*

என கூரத்தாழ்வான் அருளிய ஆசார்ய பரம்பரையில் உள்ள வேத சாரமான க்ரந்தங்களே நமக்கு உபாதேயம் ; அதற்கு விரோதமான மற்றவர் வாக்கைக் கொண்டு, இக்குழுவில் விவாதிப்பது உசிதமாகாது.

*ந தைவம் தேசிகாத் பரம்*

*தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்*

*****

13.7.2023
வியாழன் கிழமை

*வைகுந்தம் அடைந்த ஜீவன் அளவு பட்டவனா? - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்*

1. உலகத்தில் வஸ்துக்கள் மூன்று விதங்களில் அளவிற்கு உட்படுகின்றன :

*தேச பரிச்சேதம்* - ஒரு தேசத்தில் உள்ளது மற்றதில் இல்லாமற் போவது.

*கால பரிச்சேதம்* - ஒரு காலத்தில் உள்ளது மற்றதில் இல்லாமற் போவது.

*வஸ்து பரிச்சேதம்* - ஒரு வஸ்துவில் உள்ளது மற்றதில் இல்லாமற் போவது.

# இந்த மூன்று விதமான பரிச்சேநங்கள் அற்ற போது, ***விபுத்வம்*** (அனந்தத்வம்) ஸித்திக்கும் ;
திருமங்கை ஆழ்வார், பெரிய திருமொழியில் (3-8-1)

***நந்தா விளக்கே அளத்தற்கு அரியாய் நர நாரணனே! கருமா முகில் போல் எந்தாய், எமக்கே அருளாய், என நின்று இமையோர் பரவும் இடம், எத்திசையும் கந்தாரம் அத்தேனிசை பாட மாடே களி வண்டும் இழற்ற நிழல் துதைந்து, மந்தாரம் நின்று மண மல்கு நாங்கூர் மணிமாடக் கோயில் வணங்கு என் மனனே***

என அருளினார்.

அதன் பொருள் :

‘நித்யமாய் ஸ்வயம் ப்ரகாசமான ஞானத்தை ஸ்வரூபமாகவுடையவனே! ***அளவிட முடியாதவனே*** ! நர நாரயணாவதாரம் செய்தருளினவனே! கறுத்துப் பெருத்த மேகம் போன்ற எம்பெருமானே (தூய்மையான நீரை வழங்குபவனே) ! எங்களுக்கே அருள் செய்ய வேணும் என்று சொல்லி தேவர்கள் இந்நிலத்தில் வந்து நின்று துதி செய்யும் இடமானதும், அழகிய தேன் ஜாதி வண்டுகள் எல்லா இடங்களிலும் தேவகாந்தாரி ராகம் பாடவும், களி வண்டு ஜாதியில் பிறந்த வண்டுகள் பக்கங்களில் ஆலாபனை பண்ணவும், பாரிஜாத மரங்கள் நிழல் தர நெருங்கி நின்று பரிமளம் நிறைந்து இருக்கப் பெற்றதுமான திருநாங்கூரிலுள்ள மணிமாடக் கோயிலை என் மனனே வணங்கு !’

ஆக, ஈஸ்வரன் அளவிட முடியாதவன்; விபு ஸ்வரூபன் ; ஸ்வரூப நிரூபக தர்ம மாய் அனந்தத்வத்தை உடையவன் ; அதாவது,

*__ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ருஹ்ம; ஆனந்தம் ப்ருஹ்ம; அமலம் ப்ருஹ்ம__*

என்கிறது தைத்ரீய உபநிஷத் வரி.

*__ஸத்யம்__* (மாறுதலற்றது) *__ஞானம்__* (அறிவு கொண்டது), *__அனந்தம்__* (அனைத்திலும் வ்யாபித்திருப்பது), *__ஆனந்தம்__* (இன்பமயமானது) மற்றும் *__அமலம்__* (குற்றமற்றது) - பகவத் இலக்கணம்.

*__அனந்தம்__* (வ்யாபித்திருப்பது - அனைத்து காலங்களிலும் - அனைந்து வஸ்துக்களிலும்) என்பது ஈஸ்வர தர்மமானபடியால், அவனை *__விபு ஸ்வரூபன்__* என தெளிவு படக் கூற வேண்டுவதாகிறது.

# பிராட்டியோடு கூடிய எம்பெருமானுக்கே விபுத்வம் சொல்லும் ப்ரமாணங்கள் இருப்பதால், பிராட்டியோடு கூடிய நாராயணன் ஒருவனை பரம்பொருள் என கொள்ள வேண்டும்.

*__ஹ்ரீஸ்சதே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ__* என்கிற ஸ்ருதி வாக்யத்தை வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்ரீராமானுஜர் விளக்கும் போது,

*__அஸ்ய ஈஸாந ஜகத: விஷ்ணு பத்நி__* எனக் கூறி,

பிராட்டியின் ஸ்வரூபம் எம்பெருமானைப் போன்றதே என அருளுகிறார்.

இதனால், எனவே, *__அனந்த__* பதம் கொண்டு, பிராட்டிக்கும் விபு ஸ்வரூபம் உள்ளது என அறியலாம்.

*__யதா ஸர்வ கதோ விஷ்ணு: ததை வையம் த்விஜோத்தம__* என்று பராசர மஹரிஷியும்,

எம்பெருமான் அனைத்து இடங்களிலும் வ்யாபித்திருப்பது போல், பிராட்டியும் வ்யாபித்திருக்கிறாள், என்கிறார்.

இதனால், பிராட்டிக்கும் விபு ஸ்வரூபம் உள்ளது என அறியலாம்.

*__நாராயண பரப்ருஹ்ம சக்திர்நாராயணி ச ஸா. வ்யாபகாவதி ஸம்ஸ்லேஷாத் ஏக தத்வமிவோதிதௌ__*

என்கிற ஸம்ஹிதா வாக்கியத்தினால்,

பெருமாளும் பிராட்டியும் ஸகல வஸ்துக்களிலும் பிரிவற்று ஒன்றாக வ்யாபித்திருப்பவர்கள், என்பது தெளிவாகிறது.

இதனால், எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் விபு ஸ்வரூபம் உள்ளது என அறியலாம் ; அதாவது, திவ்ய தம்பதிகள், அளவிற்கு உட்படாதவர்கள்.

2. ஸ்வாமி தேசிகனின், *__தத்வ பதவீ__* என்னும் சில்லரை ரஹஸ்ய க்ரந்தம்,

*__சேதநமான அவர தத்வம் பரிசின்னமான அஹமர்த்தம் ; இதற்கு ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் பராயத்தங்களாய் இருக்கும்__*

என்கிறது ; அதாவது, ஜீவ தன்மைகளாவது, அளவில் சிறியதான நான் என்பதற்கு பொருளாகும் ; இதற்கு, அறிவுடைமை, செயல் புரியும் தன்மை உடைமை, பலனை அநுபவிக்கும் தன்மை எம்பெருமானுக்கு அதீனமாக இருக்கும்.

# ஜீவ ஸ்வரூபத்தை ப்ரமாணங்கள் விளக்கும் போது *ஞானமாயும்* , *ஆனந்தமாயும்* , *அமலமாயும்* மற்றும் *அணுவாயும்* இருப்பதாகக் கூறப் படுகிறது.

இதனை *தத்வ த்ரய சிந்தனாதிகாரத்தில்* ஸ்வாமி தேசிகன் அருளியுள்ளார் :

***ஆகையால், ஜீவ ஸ்வரூபத்தை ஞானத்வம், ஆனந்தத்வம், அமலத்வம், அணுத்வம் இத்யாதிகளான நிரூபக தர்மங்களையிட்டு நிரூபித்து ஞானம், ஆனந்தம், அமலம் அணு என்று இம்முங்களாலே சொல்லக்கடவது***

# சேதநர்களுக்கு, விஷய ஞானம் தர்ம பூத ஞானத்தினால் உண்டாகிறது.

***தத்வ பதவீ*** என்கிற க்ரந்தத்தில்,

***தர்ம பூத ஞானமாவது, பர அவர ஆத்மாக்களுக்கு, ஸ்வாத்மாவையும், ஸ்வ வ்யதிரிக்த வஸ்துக்களையும் ப்ரகாசிப்பிக்கவற்றான ஞானம்***

ஸ்வாமி தேசிகன் அருளி இருக்கிறார். ஈஸ்வரனுக்கும், நித்ய முக்கர்களுக்கும் தர்ம பூத ஞானம், முற்றிலும் மலர்ந்து, விஷய ப்ரகாசம் குற்றமற்றதாக, அதாவது சம்சயம் (சந்தேகம்) விபர்யயம் (விபரீத ஞானம்) அற்று இருக்கிறது. சம்சாரி ஜீவர்களுக்கு, கர்ம அநுகுணமாக தர்ம பூத ஞானம் மலர்ந்தும் சுருங்கியும் இருக்கிறது ; இதனால், விஷயங்களில் க்ரஹிப்பதில் குற்றங்கள் உள்ளனவாகிறது.

அதாவது,

***ஸ்வாத்மாவை ப்ரகாசப் படுத்துவது* -**

***தர்மி ஞானத்தினால்*** தன் இருப்பை மட்டும் அறிந்திருக்கும் சேதநன் மற்றும் பரம சேதநன், தான் எத்தகையவன் என்பதை ***தர்ம பூத ஞானம்*** கொண்டே அறிகிறான்.

அதாவது, இந்த ஜீவாத்மா பகவானுக்கு சேஷன், அணு ஸ்வரூபன் போன்றவைகளை ***தர்ம பூத ஞானம்*** கொண்டே அறிகிறான்.

அதே போல் பரம சேதநனும், தான் ஸர்வருக்கும் சேஷி என்பதையும், விபு ஸ்வரூபன் போன்றவைகளை ***தர்ம பூத ஞானம்*** கொண்டே அறிகிறான்.

***ஸ்வ வ்யதிரிக்த வஸ்துக்களை ப்ரகாசப் படுத்துவது* -** மற்ற சேதந அசேதந வஸ்துக்களின் இருப்பு மட்டும் அதன் தன்மைகளை, ***தர்ம பூத ஞானம்*** கொண்டே, அறிகிறான்.

3. பகவத் ராமானுஜர், ஶ்ரீபாஷ்யம் விலக்ஷணத்வாதி அதிகரணத்தில், பகவானோடு உள்ள சரீர- ஆத்ம சம்பந்தத்தை விளக்குகிறார்.

***யஸ்ய சேதநஸ்ய யத் த்ரவ்யம் ஸர்வாத்மனா ஸ்வார்த்தேஷு நியந்தும் தாரயிதும் ஷக்யம் தத் ஸேஷதைக ஸ்வரூபம் தத் தஸ்ய சரீரம். இதரஹ சரீரி***

என பொதுவான சரீர ஆத்ம இலக்கணத்தை அருளினார்.

அதாவது, சேதநமான ஆத்மா, அப்ருதக்ஸித்த சம்பந்தமுடைய த்ரவ்ய சேதந அசேதநங்களைச் சரீரமாக்க் கொள்ளலாம், என்றபடி.

***ஆத்மா ஆதாரம்* -** ஆத்மா இல்லாமல், அதனுடைய சரீரம் நிலை குலையக்கூடியது.
***ஆத்மா நியந்தா* -** ஆத்மாவின் விருப்பப்படியே, அதனுடைய சரீரம் இயங்கக்கூடியது.
***ஆத்மா சேஷி* -** ஆத்மாவின் உபயோகத்திற்காகவே அதனுடைய சரீரம் இருக்கிறது.

மேற் கூறிய இலக்கணத்தினால், ஸர்வேஸ்வரன் (பரம்) ஆத்மா, சேதந அசேதநங்கள் அவனுக்கு சரீரம் என்றாகிறது.

ஆக, அதனால் சேதந-அசேதந-ஈஸ்வர ஐக்கியம் அநுபபன்னம்.

# ஸ்ரீமத் ராமாயணத்தில், ஸ்ரீராம தூதனாக சிறிய திருவடியான ஹனுமான், லங்கையை அடைந்து ஸீதா பிராட்டியைக் கண்டு, தான் ஸ்ரீராம தூதன் என விண்ணப்பிக்கிறார்.

அப்போது, பிராட்டியானவள், ***வாநராணாம் நராநாஞ்ச கதமாஸீத் ஸமாகம:?*** என வினவுகிறாள். (அதாவது வனரனான ஸுக்ரீவனுக்கும் ஸ்ரீராமனுக்கும் எப்படி சேர்க்கை ஏற்பட்டது?)

அதற்கு பதில் அளித்த ஹனுமான், ***ராமஸுக்ரீவ ஐக்யம் தேவி ஏவம் ஸமஜாயத*** (அதாவது, 'தேவி! ஸ்ரீராமனுக்கும் ஸுக்ரீவனுக்கும் கருத்து ஒற்றுமை இவ்வாறு ஏற்பட்டது') என விளக்கலானார்.

ஆக, ஐக்யம் என்கிற பதம், பல வற்றில் வேற்றுமை உள்ள இடங்கிளில், ஒரு சில ஒற்றுமைகளை கூறுமே அன்றிக்கு, இரண்டறக் கலப்பதை அங்கு கூறுவது ஆகாது.

ஆக, ஐக்யம் என்கிற சொல் சில ஒற்றுமையை கூறும் இடத்திலும் வரும்.

# கண்ணன் கீதையில் கூறும் போது,

***உத்தம புருஷஸ்த்வன்ய: பரமாத்மேத்யுதாஹ்ரத: யோ லோகத்ரயமாவிஷ்ய பிபர்த்யவ்யய ஈஸ்வர:***

என்கிறான்.

அதாவது, 'புருஷோத்தமன் ஆன பரமாத்மா, க்ஷரர்கள் மற்றும் அக்ஷரர்களை விட வேறு பட்ட்வன். பரமாத்மா இவர்களை ஆள்பவன்.' 'ஞானமாயும்' மற்றும் 'ஞானத்தை குணமாக உடையதாயும்' இருக்கும் ஜீவர்களை இரண்டு வகையாக பிரித்து க்ஷரர்கள் (பத்த ஜீவர்கள் - கர்மாவினால் பிறவி பிணியில் அகப்பட்டவர்கள்) என்றும், அக்ஷரர்கள் (முக்தர் மற்றும் நித்ய ஜீவர்கள் - பிறவி பிணி இல்லாமல் பரமபதத்தில் உள்ளவர்கள்) என்றும் கண்ணன் விளக்கினான்.

ஸர்வேஸ்வரனான கண்ணன் தான் புருஷோத்தமன் ஆன பரமாத்மா என்றும், க்ஷரர்கள் மற்றும் அக்ஷரர்கள் அவளை விட வேறு பட்டவர்கள என்றும் அவர்கள் அனைவரும் கண்ணனின் ஆதிக்கத்தில் இருப்பவர்கள் என்றும் இந்த ஸ்லோகத்தில் விவரிக்கிறான் கண்ணன்.

ஆக, ஜீவ ப்ருஹ்ம ஐக்யம் பொருந்தாது.

# ***அய: பிண்டே யதா வஹ்நிர் பின்னஸ்தி ஷ்டத்ய பின்னவத் ததா விச்வமிதம் தேவோ ஹி ஆவ்ருத்ய ப்ரதிஷ்டதி***

என்கிறது ஐயாக்ய ஸம்ஹிதை. அதாவது, பழுக்க காய்ச்சிய இரும்பு குண்டு ஒரு வஸ்துவாக காட்சி அளித்தாலும், அதில் இரும்பு வேறு தன்மைகளைக் கொண்டது, அக்நி வேறு தன்மைகளைக் கொண்டது, அல்லவா? இதே போல், ஸர்வ அந்தர்யாமியான ஈஸ்வரன் ஸ்வரூப ஸ்வபாவங்களினால் வேறு பட்டவனாயினும், ஆனால் எங்கும் வ்யாபித்து இருப்பதினால் ஒன்று போல காட்சி அளிக்கிறான்.

அவன் ஸ்வரூப ஸ்வபாவங்கள் ஜீவர்களின் ஸ்வரூப ஸ்வபாவங்களை விட வேறானது. ஆக ஜீவர்களும் ஸர்வேஸ்வரனும் ஒன்று எனக் கூற இயலாது.

4. ஜீவ ஈஸ்வர ஸ்வரூப ஸ்வபாவங்கள், வேறானது.

# தத்வங்களில் ***ஜீவ ஸ்வரூப ஸ்வபாவம்*** எனப் படுவதாவது :

*ஜீவ ஸ்வரூபம்* - என்பது *ஜீவ இருப்பைக்* குறிப்பதாகும் ; அதாவது அததற்கே உரிய ஸ்வரூப நிரூபக தர்மங்களால் நிர்தாரிக்கப் பட்ட தன்மை. அதாவது, ஞானத்வம், ஆனந்தத்வம், அமலத்வம், அணுத்வம் ஆகியவைகளை உடையவை.

*ஜீவ ஸ்வபாவம்* - என்பது *ஜீவ இயல்பைக்* குறிப்பதாகும் ; அறியும் தன்மைக்கு உதவுகிற தர்ம பூத ஞானத்தினுடைய ஏற்ற சுருக்கங்களால் உண்டாகும் நிலை ; அதாவது, பத்த தசையில் தர்ம பூத ஞானம் சுருங்கியும், முக்த தசையில் விகசித்தும் இருக்கும் தர்ம பூத ஞானம்.

# தத்வங்களில் *ஈஸ்வர ஸ்வரூப ஸ்வபாவம்* எனப் படுவதாவது :

*ஈஸ்வர ஸ்வரூபம்* - என்பது *ஈஸ்வர இருப்பைக்* குறிப்பதாகும் ; அதாவது அததற்கே உரிய ஸ்வரூப நிரூபக தர்மங்களால் நிர்தாரிக்கப் பட்ட தன்மை. அதாவது, ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ருஹ்ம; ஆனந்தம் ப்ருஹ்ம; அமலம் ப்ருஹ்ம என்றும் ஹ்ரீஸ்சதே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ என்றும் உள்ளது.

*ஈஸ்வர ஸ்வபாவம்* - என்பது *ஈஸ்வர இயல்பைக்* குறிப்பதாகும் ; எப்போதும் விகசித்து இருக்கும் தர்ம பூத ஞானம்.

# ஆக, ஸ்வரூபத்தால் விபுவான ஈஸ்வரனுக்கு, த்ரிவித பரிச்சேதமும் கிடையாது ; அதாவது, தேச, கால, வஸ்துக்களால் அளவிட முடியாதது; ஆனால், ஸ்வரூபத்தால் அணுவான ஜீவனக்கு, நித்யத்வம் உடையபடியால், காலத்தினால் அளவிடும் தன்மை இல்லாவிடினும், தேச மற்றும் வஸ்துக்களால் அளவிட முடியும் ; அதனால், ஜீவன் அளவுக்கு உட்பட்டவன்.

ஸ்வாமி தேசிகன், *ஸித்தோபாய சோதனாதிகாரத்தில்* ,

*யுகபதகில்லம் ப்ரத்யக்ஷேன ஸ்வத: ஸததம் விதன்*

என்று,

ஸர்வேஸ்வரன், அனைத்தையும், அனைத்து காலங்களிலும், ஒரே சமயத்தில் உள்ளது உள்ளபடி அறிபவன், என்கிறார் ; இந்த நிலை எம்பெருமானுக்கு ஸ்வாதீனம்.

ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில், (14-2)

*இதம் ஜ்ஞானம் உபாஸ்ரித்ய மம ஸாதர்ம்யம் ஆகதா: ஸர்கேபி நோபஜாயந்தே ப்ரலயே ந வ்யதந்தி ச*

என்கிறார்.

அதாவது, உண்மையான ஞானம் பெற்று மோக்ஷத்திற்கான உபாயத்தை அநுஷ்டித்து அவனை அடைந்தவர்கள் அவனுக்கு ஸமமான நிலையை அடைகிறார்கள் (ஞானத்தில் தோன்றுவதான ஆனந்தத்தை பெறுகிறார்கள்) என்கிறான் பகவான்.

கர்ம ஸம்பந்தமற்ற ஜீவர்களும் நித்ய விபூதியில், அனைத்தையும், அனைத்து காலங்களிலும், ஒரே சமயத்தில் உள்ளது உள்ளபடி அறிபவன், ஆகிறான் ; ஆனால் இந்த நிலை பகவத் அதீனம்.

ஆக, நித்யமான ஜீவ ஸ்வருபம் அணுவான படியால், அது அளவிற்கு உட்பட்டது ; பரிபூரண ஞான விகாசத்தை உடைய நித்யர்-முக்தர் விஷயத்தில், தர்ம பூத ஞானம் தேச-வஸ்துக்களால் அளவிற்று உட்படாதது ; அந்த நிலை ஜீவர்களுக்கு பகவத் அதீனம்.

5. தேஹ அவஸானத்திற்கு பிறகு, ஸாத்யோபாயத்தை அநுஷ்டித்த ப்ரபன்னன், பரமபதத்தை அடைவதாக சாஸ்த்திரங்கள் உரைக்கின்றன ; ஸ்வாமி தேசிகன், பரமபத ப்ராப்தியை,

*விதமஸி பதே லக்ஷ்மீகாந்தம் விசித்திர விபூதிகம். ஸசிவ கமித: ஸம்பயாவிர்பவதி ஸஹஜ ஆக்ருதி: ஸ்புடதத் அப்ருதக் ஸித்தி: ஸித்யத் குணாஷ்டக தத்பலோ. பஜதி பரமம் ஸாம்யம் போகே நிவ்ருதி கதோஜ்ஜிதம்*

என விளக்குகிறார் ; அதாவது, இந்த ப்ரக்ருதிக்கு அப்பால் உள்ள ஸ்ரீவைகுண்டத்தில், வியக்க வைக்கும் இரண்டு விபூதிகைள (நித்ய விபூதி மற்றும் லீலா விபூதி) தன் வசத்தில்  கொண்டவனாகிய, மஹாலக்ஷ்மி பிராட்டியின் நாயகனான, ஸ்ரீமந் நாராயணன் நித்ய வாஸம் செய்து கொண்டு உள்ளான் . சரணாகதன், ஆதிவாஹிகர்களால் வழி நடத்தப்பட்டு, அவனை அடைகிறான். அப்போது அந்த ஜீவனுக்கு உண்டான இயற்கையான தன்மைகள் வெளிப்படுகின்றன.

திருமாமணி மண்டபத்தில், ஸர்வேஸ்வரன் கடாக்ஷத்தால், ஸ்வரூப ஆவிர்பாவம் பெற்று முக்தனாகும் அளவும் சரணாகதன் பரிபூரண ஞானத்தை பெறாதவனே!

மோக்ஷத்தை (பரமபதத்தை) அடைந்த ஜீவர்கள் பாப புண்ய கர்ம ஸம்பந்தங்களற்று, இயற்கை நிலையில், கீழ் உள்ள எட்டு (ஸர்வேஸ்வரனுக்கு நிகரான) ஸ்வபாவங்களோடு இருந்து போகிறார்கள்:

# *அபஹதபாப்மத்வம்* - சாஸ்த்திர கட்டுப்பாடு, நித்ய விபூதியில் கிடையாது. ஆகையால், பாபம், (அதாவது சாஸ்த்திரத்தை மீறிய செயல்) என்பதிற்கு வழியே கிடையாது. பாபமற்ற ஜீவன் ஞான விகாசத்தோடு இருக்கிறான்.

# *விஜரத்வம்* -  அனைத்து காலத்திலும் அங்குள்ளவர்கள் இளமை பருவமுடையவர்களாகவே இருப்பார்கள். ஆக, கிழத்தனம் அங்கு யாருக்கும் கிடையாது.

# *விம்ருத்யுத்வம்* - ஜீவர்கள் அனைவரும் உண்டாவதும் இல்லை, அழிவதும் இல்லை. ஆதலால் மரணம் என்ற சொல்லுக்கே வாய்ப்பு கிடையாது. (இங்குள்ள காலம், நித்யமான ஜீவர்களிடம் சரீர சேர்க்கையையே பிறவி என்றும், சரீரத்தை விடுவதையே மரணம் என்றும் கூறுகிறோம்)

# *விசோகத்வம்* - பாபத்தினால் ஏற்படக்கூடிய சோகங்களுக்கு அங்கு வழி இல்லை. சாஸ்த்திர கட்டுப்பாடு, நித்ய விபூதியில் இல்லாத காரணத்தால்.

# *விஜிகத்ஸத்வம்* - ஆகாரம் உட்கொள்வது சரீரத்திற்காக. இயற்கையில் ஆத்மாவிற்கு பசி கிடையாது.

# *அபிபாஸத்வம்* - நீர் உட்கொள்வது சரீரத்திற்காக. இயற்கையில் ஆத்மாவிற்கு தாகம் கிடையாது.

# *ஸத்யகாமத்வம்* -  இந்த உலகத்தில் விரும்பியதை அடையமுடியாமல் போவதற்கு காரணம், பாபங்களாகும். அங்கு, பாவம் என்பதிற்கு வழியே கிடையாது. ஆக, இயற்கையில் நினைத்ததை அடையும் தன்மை ஜீவர்களுக்கு உண்டு.

# *ஸத்ய ஸங்கல்பத்வம்* - முயற்சி இல்லாமல் நினைத்த உடனேயே எண்ணங்கள் நிறைவேரும் தன்மை ஸகல ஜீவர்களுக்கும் இயற்கை. அந்த தன்மை அங்கே வெளிப்படுகிறது.

ஆக, வைகுந்தத்தை அடைந்த முக்த ஜீவன், *ஸ்வரூபத்தால் அளவு பட்டவன்* ; ஆனால், விகஸித்த தர்ம பூத ஞானத்தை உடைய முக்த ஜீவன் *ஸ்வபாத்தால் அளவு படாதவன்* - அதாவது, நித்ய விபூதியில் ஜீவர்களின் தர்ம பூத ஞானத்துக்கு விபுத்வம் உண்டு.

*ந தைவம் தேசிகாத் பரம்*

*தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்*

******

14.7.2023
வெள்ளிக் கிழமை

***கார்யம் அகார்யம் இணைவது எப்படி? - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்***

1. கண்ணன் பகவத் கீதையில் (16-24),

***தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்ய அகார்ய விவஸ்திதௌ. க்ஞாத்வா சாஸ்த்ர விதானோக்தம் கர்ம கர்தும் இஹ அர்ஹஸி***

அதாவது,

‘தர்ம சாஸத்ரத்தில் விதித்தபடி ‘எது எவ்வாறு செய்ய தக்கது’ மற்றும் ‘எது செய்யத் தகாதது’ என்பதை அறிந்து அதற்கேற்ப செயல் படவேண்டும்’,

என அருளியுள்ளான்.

# விஷ்ணு தர்மத்தில் கூறுவதாவது :

***ஸ்ருதி ஸ்ம்ருதி மமை ஆக்ஞா யஸ்தாமுவ்லங்ய வர்த்தே ஆக்ஞாஸ்சேதீ மம த்ரோஹீ மத் பக்த: அபி ந வைஷ்ணவ:***

என்ற எம்பெருமானின் திருவாக்குப் படி,

‘வேதாந்தங்களும், ஸ்ம்ருதிகளும் என் கட்டளைகளாகும்; அவற்றை மீறி நடப்பவர்கள் யாராக இருப்பினும் எனது ஆணைகளை மீறுபவன் ஆவான் ; அவன் என்னிடத்தில் மிகுந்த பக்தி கொண்டிருந்தாலும் அவன் வைஷ்ணவன் அல்லன்’ – என்கிறான் ஸர்வேஸ்வரன் .

# பெரிய பிராட்டியாரான மஹாலக்ஷ்மி, பாஞ்சராத்ர சாஸ்த்திரத்தில், தன் திருவாக்கினால் கூறப்பட்டது:

***அவிப்லவாய தர்மாணாம் பால நாய குலச்ய ச சங்க்ரஹாய ச லோகஸ்ய மர்யாதா ஸ்தாப நாய ச ப்ரியாய மம விஷ்ணோச்ச தேவ தேவஸ்ய சாரங்கிண மநீஷீ வைதிகாசாரம் மநஸா அபி ந லங்கயேத்***

அதாவது, ‘தர்மங்கள் மாறாமல் இருக்கவும், குலங்களை காப்பாற்றவும், இந்த உலகை தூய்மையான வழியில் நிலையாக நிறுத்தவும் , சாஸ்த்ரங்களுக்கான மரியாதை என்றும் பாதுகாக்கவும், சாஸ்த்ரத்தில் விதிக்கப் பட்டவைகளை மீறுவதற்கு மனதாலும் நினைக்கக் கூடாது. ஏன் எனில் உகந்து ஏற்றுக் கொள்ளும் எம்பெருமானின் மகிழ்ச்சிக்காக’ என்கிறாள் மஹாலக்ஷ்மி தாயார்.

# ஸ்வாமி தேசின் இதை *__உத்தரக்ருத்யாதிகாரத்தில்__* அருளினார் :

***யஸ்ய அநுபவ பர்யந்தா புத்திஸ் தத்த்வே பிரதிஷ்டிதா. தத்த்ருஷ்டி கோசரா ஸர்வே முச்யந்தே ஸர்வகில்பிஷை***

அதாவது,

பகவத் அநுபவத்தை எல்லையாகக் கொண்ட தத்வ ஞானம் நிலை பெற்றவரான பரமேகாந்திகளின் கடாக்ஷத்திற்கு இலக்கான அனைவருக்கும் பாபங்கள் நீங்கப் பெறுகின்றன

என்கிறபடியே

அநுஷ்டானமுடையவர்களிடம் நெருங்கி இருந்து போக வேண்டும்.

அவர்களிடம் தன்னுடைய வர்ண-ஆஸ்ரம தர்மங்களுக்கு ஏற்ப தான் செய்ய வேண்டிய சாஸ்த்ரத்தில் விதித்த செயல்களை கற்று செய்ய வேண்டும்.

ஆக, சாஸ்த்திரங்களிலே உள்ள விதி நிஷேதங்களை பின்பற்ற வேண்டும் ; இது ப்ரத்யவாயம் வாராமைக்காக.

2. ஸ்வாமி தேசிகன் ஶ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரத்தில்,

*__ஆக்ஞா அநுக்ஞா விபாகேந த்விதா சாஸ்த்ரீய பத்ததி: நிக்ரஹ அநுதயாய ஆத்யா பரா தத் தத் பல ஆப்தயே__*

அதாவது,

சாஸ்த்ரங்களில் கூறப்ப ட விதிமுறைகள் ஆக்ஞை (செய்தே தீர வேண்டும்) மற்றும் அநுக்ஞை (செய்தால் பலன் விளையும்) என்று இரு வகைப்படும்.

# மோக்ஷோபாய ப்ரபத்தி அநுஷ்டித்த பின்பு, இங்குள்ள காலம் தன் ஸ்வரூபத்திற்கு ஏற்ற

*__ஆக்ஞா கைங்கர்யம்__* (ஸந்த்யாவந்தனம், ஸ்ரார்தம் போன்றவை) மற்றும்

*__அநுக்ஞா கைங்கர்யம்__* (ஞான சம்பாத்யம், கோவில் தரிசனம் போன்றவை)

அனைத்தும் எந்த ஒரு உலக பலனையும் எதிர்பார்க்காது, எம்பெருமானின் உகப்பை கருதியே, செய்தாலும், சாஸ்த்ர முறைப்படியே செய்ய வேண்டும் ; இதையே,

*__அநுக்ஞயா ப்ரவ்ருத்தே அபி கர்ம கோப ஆதி ஸம்பவே ஆக்ஞா அதிக்ரம தோஷ: ஸ்யாத் நியம: அத: துரத்யய:__*

என ஸ்வாமி தேசிகன் ஶ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில், அருளினார் ; அதாவது,

அநுக்ஞை விதியால் தொடங்கப்பட்ட கைங்கர்யம் என்ற போதும், அதில் ஏதேனும் முறை தவறுதல் போன்ற குற்றங்கள் உண்டானால், ஆக்ஞையை மீறினால் எந்த விதமான தோஷங்கள் உண்டாகுமோ, அதுவே உண்டாகும் .

ஆகவே சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட கட்டுப்பாட்டுகளை மீற இயலாதவை ஆகும் .

உதாரணமாக,

பெருமாளுக்கு துளஸி ஸமர்ப்பிப்பது ஒரு உன்னதமான அநுக்ஞா கைங்கர்யம், ஆனால், துளஸி க்ரஹிப்பதற்கு (பரிப்பதற்கு) சாஸ்த்ர விதிமுறைகள் உண்டு. ஸ்நாநம் செய்து மந்த்ர உபதேசம் பெற்ற மந்த்ரத்தை உச்சரித்து, உரிய தினங்களில் (வெள்ளி, செவ்வாய், ஞாயிறு, பித்ரு தினங்கள், வ்ரத தினங்களை தவிர்த்து) துளஸியை க்ரஹிக்க வேண்டும். கடைகளில் துளஸி வாங்கி பெருமாளுக்கு ஸமர்ப்பிக்க கூடாது ஏன் எனில் துளஸி க்ரஹித்த முறையை உறுதி செய்து கொள்ள முடியாதபடியால்.

புஷ்பங்களை ஸமர்ப்பிக்க இந்த விதிமுறைகள் கிடையாது.

ஆக, கைங்கர்யர்கள் அனைத்துமே, சரணாகதனாக இருந்தாலும், சாஸ்த்திர வரம்புக்கு உட்பட்டே அநுஷ்டிக்க ப்ராப்தம் ; இது ப்ரத்யவாயம் வாராமைக்காக.

3. ப்ரவ்ருதி நிவ்ருதி ரூபங்களான சாஸ்த்திர விதி :

# *எது எவ்வாறு செய்ய தக்கது* - என்பது *ப்ரவ்ருத்தி ரூபமான செயல்கள்* - உதாரணம் : வர்ண ஆஸ்ரமாதி கர்மங்கள் ;

வர்ண ஆஸ்ரம தர்மத்தின் கர்மாக்கள் முக்கியம் என்று விளக்குகிறான் ஸர்வேஸ்வரனான கண்ணன், இந்த ஸ்லோகத்தில் (18-45).

***ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத: ஸம்ஸித்திம் லபதே நர: ஸ்வ கர்ம நிரத: ஸித்திம் யதா விந்த்தி தச்ருணு***

அதாவது,

'தன் தன் வர்ணத்துக்கான செயல்களில் ஈடுபட்டவன் பரம பலனை அடைகிறான். அந்த வழியை சொல்கிறேன் கேள்' - என்கிறான் கண்ணன்.

# *எது செய்யத் தகாதது* - என்பது *நிவ்ருத்தி ரூபமான செயல்கள்* - உதாரணம் : ஏகாதசியில் அன்னம் உட்கொள்ளலாகாது ;

ப்ரமாணங்கள்,

***ஏகாதச்ய அன்ன காமாஸ்து பித்ருபி ஸ: மஜ்ஜதி***

என்கின்றன ; அதாவது ஏகாதசியில் அன்னத்தை உண்பவன் பித்ருக்களோடு நரக வாசம் செய்ய வேண்டியவனாகிறான் ; ஆக, இதனால் உண்டாகும் பித்ரு தோஷம் வம்சத்துக்கு ஹானிகரம்.

***ஏகாதச்யாம் ஸுரஸ்ரேஷ்ட யோ புக்ங்தே த்விஜ ஜன்மவான்ப்ரதிக்ராஸமயம் புங்தே கில்பிஷம் ஸ்வானவின ஸமம்***

என்பது ஸாத்வத ஸம்ஹிதை வரி.

அதாவது,

அந்தணனாகப் பிறந்து எவன் ஏகாதசி அன்று அன்னத்தை புஜிக்கிறானோ அவன் ஒவ்வொரு கபளத்திலும் பாபத்தை உண்கிறான். அந்த கபளமானது நாயின் மலத்திற்கு ஸமம்,

என்பதாகிறது.

# சாஸ்த்திர விதி நிஷேதங்களை பின்பற்றி செய்யப் படும் கர்மாவானால் புண்யம் சம்பவிக்கும் ; அதனை பின்பற்றாமில் செய்யப் படும் கர்மாவானால் பாபம் சம்பவிக்கும் ; இவ்விஷயத்தில், மேலும் ஸ்ரீகீதார்த்த ஸங்க்ரஹத்தில்,

***அசாஸ்த்ரம் ஆஸுரம் க்ருத்ஸ்நம் சாஸ்த்ரீயம் குணத ப்ருதக் லக்ஷணம் சாஸ்திர சித்தஸ்ய த்ரிதா சப்தத ஸோதிதம்***

என ஸ்ரீஆளவந்தார் அருளிச் செய்தார்.

அதாவது, சாஸ்த்ரத்திற்கு உட்படாத செயல்கள் அனைத்தும் அசுரத் தன்மை உள்ளவைகளாகும் என்றும் சாஸ்த்திரம் விதித்தவற்றை மறுக்காமல் செய்து போவதே ஜீவர்களின் லக்ஷணம், என அருளினார்.

ஆக. சாஸ்த்திர சம்மதத்தோடு, விதி நிஷேதங்களை பின்பற்ற வேண்டும் ; அதாவது, சம்சாரி ஜீவர்கள், ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி தர்மங்களில், செயல் பட வழி இருக்கிறது ; ***தர்மமாவது சாஸ்த்திரம் கொண்டே அறிய வேண்டுவதாகிற பலத்திற்கான ஸாதனம்*** ; தர்ம சாஸ்த்திர ப்ரமாண வாக்யமானது,

***தர்மேண பாபம் அபநுததி***

என்று சாஸ்த்திரம் விதித்த ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி தர்ம அநுஷ்டானத்தாலே பாபங்கள் களையப் படுகின்றன, என்கிறது.

ஆக, சாஸ்த்திர விரோத செயல்கள் பாப ஹேது ; அநிஷ்டாவகம். சாஸ்த்திர விஹித செயல்கள் பாப நாசகத்வ ஹேது.

4. சாஸ்த்திங்கள், ப்ரவ்ருத்தி மற்றும் நிவ்ருத்தி தர்மங்களை உரைக்கிறது; அதாவது, ப்ராக்ருத பலன்களை அளிக்கவல்ல ப்ரவ்ருத்தி தர்மங்களையும் மோக்ஷ பலனை அளிக்கவல்ல்ல நிவ்ருத்தி தர்மங்களையும் விளக்குகிறது.

***ப்ரவ்ருத்தி லக்ஷணம் தர்மம் ப்ரஜாபதி: அப்ரவீத் ப்ரவ்ருத்தி புனராவ்ருத்தி : நிவ்ருத்தி: பரமா கதி***

***வ்யக்தம் ம்ருத்யு முகம் வித்யாதவ்யக்தம் அம்ருதம் பதம் நிவ்ருத்தி லக்ஷணம் தர்மம் ரிஷி நாராயணோப்ரவீத்***

என மஹாபாரத சாந்தி பர்வாவில் வரும் ஸ்லோகம்.

அதாவது,

ப்ரவ்ருத்தியை லக்ஷணமாக உடையவற்றை, அதாவது ப்ராக்ருத லோக பலன்களை அளிக்கவல்ல சாஸ்த்தரீயமான வைதீக செயல்களை, சதுர்முக ப்ருஹ்மா விவரித்தான்; இது ***ப்ரவ்ருத்தி தர்மமாகிறது***.

உலக பலனை விடுத்து, ஸ்வரூப அநுகுணமான மோக்ஷ பலனை அளிக்கவல்ல சாஸ்த்தரீயமான வைதீக செயல்களை, நாராயணன் விவரித்தான்; இது ***நிவ்ருத்தி தர்மமாகிறது***.

# ஆக, சாஸ்த்திர நியம விஷயத்தில், ப்ரவ்ருத்தி ரூபமாகவும், நிவ்ருத்தி ரூபமாகவும் இருக்கும் போது, ***கார்யம் (செய்ய தக்கது)*** மற்றும் ***அகார்யம் (செய்யத் தகாதது) இணைவது*** ஸாத்யம்.

அது போல, இரு தர்மங்களும் சாஸ்த்திர விஹிதமே என்பதில் ஒருமித்த நிலை உண்டாகிறது ; அதனால் உண்டாகும் பலன்களில் தாரதம்யம் உண்டாகிறது ; அதனால் தான், வேத வேதாந்த சாஸ்த்திரங்களுள், ***உபாதேயங்கள் எவை*** மற்றும் ***த்யாஜ்யங்கள் எவை*** என்பவைகளைச் சுட்டிக் காட்டி விளக்கி அருள்கிறார் ஸ்வாமி தேசிகன்.

***அசாரம் அல்ப சாரம் ச சாரம் சாரதரம் த்யஜேத். பஜேத் சாரதமம் சாஸ்த்ரே ரத்னாகர இவாம்ருதம்***

அதாவது,

***அசாரம்*** - சாஸ்த்ரத்திற்கு முரணான விஷயங்கள்; முற்றிலுமாக தவிர்க்கப் பட வேண்டியது.

***அல்ப சாரம்*** - ஐஹிக பலன் (இந்த லோகத்துப் பலன்கள்); அல்பமானதால் தேவையற்றது.

***சாரம்*** - ஆமுஷ்மிக பலன் (ஸ்வர்காதி பலன்கள்); மோக்ஷ பலனுக்கு தடையானது; தேவையற்றது.

***சார தரம்*** - கைவல்யம் (ஆத்மானுபவம்); இயற்கையான ஜீவர்களின் உயர்ந்த பலனுக்கு விரோதமானது; தேவையற்றது.

*சார தமம்* - வைகுண்டப் ப்ராப்தி (மோக்ஷம்); உயர்ந்த பலன்; அடைய தகுந்தது.

ஆக, அசாரத்தைத் தவிர, மற்றபடி அல்ப சாரம், சாரம் , சார தரம் மற்றும் சார தமம் அனைத்துமே சாஸ்த்திர விஹிதங்கள், என்பதால் இணைகிறது ; ஆனால், அல்பத்வ அஸ்திரத்வாதி தோஷங்கள் உள்ளவற்றையும் சார தமமான பரம புருஷார்த்தத்தையும் ஒப்பிடும் போது, பேதம் ஸித்திக்கிறது.

5. இதனால், *காரியம் அகார்யம் இணைவது எப்படி* என்னில்,

# சாஸ்த்திர விதிகள் மற்றும் சாஸ்த்திர நிஷேதங்கள் இரண்டுமே சாஸ்த்திர விஹிதங்கள், என்பதால் இணைகிறது ; சாஸ்த்திர விதிகள் அநுஷ்டிக்கப் பெற்று சாஸ்த்ரீயமாகிறது ; சாஸ்த்திர நிஷேதங்கள் அநுஷ்டிக்காமல் இருந்து சாஸ்த்ரீயமாகிறது.
மற்றும்

# ப்ரவ்ருத்தி தர்மம் மற்றும் நிவ்ருத்தி தர்மம் இரண்டுமே சாஸ்த்திர விஹிதங்கள், என்பதால் இணைகிறது ; ஆனால், ப்ரவ்ருத்தி தர்மம் சம்சார பந்த ஹேது ; நிவ்ருத்தி தர்மம் மோக்ஷ ஹேது.

*ந தைவம் தேசிகாத் பரம்*

*தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்*

******

15.7.2023
சனி கிழமை

*சரீர சரீரி சம்பந்தத்தில் சரீரத்தை உபாதானமாகுமோ? - விளக்கம் - விவாத மேடை விஷயம் - ஒலி நாடா*

1. இந்த *ஜகத் காரணத்வம்* ப்ருஹ்மத்திற்கு (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா) லக்ஷணமாகக் கூறப்படுகிறது.

# தைத்ரிய உபநிஷத்தில் கூறப்படும் ஸர்வேஸ்வரனுக்கான இலக்கணமாவது -

*யதோவா இமானி  பூதானி ஜாயந்தே யேன ஜாதானி ஜீவநதி யத் பிரயந்த்ய பி சம்விசந்தி தத் விஜிஜ்ஞாஸ் ஸ்வ தத் ப்ரஹ்மேதி*

அதாவது,

எவனிடமிருந்து இந்த லோகங்கள் உண்டாகிறதோ, எவனால் அவை காக்கப் படுகிறதோ, எவனிடத்தில் அவை லயத்தை அடைகிறதோ அவனே ஸர்வேஸ்வரன்.

# உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய *ப்ருஹ்ம ஸூத்ரம்*

*ஜன்மாத்யஸ்ய யத:*

அதாவது,

உலகம் எவனிடம் இருந்து உண்டாகிறதோ அவன் ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா).

# ஒரு உற்பத்திக்கு மூன்று காரணங்கள் உள்ளன.

*__உபாதான காரணம்__* : மூலப் பொருள்  (Raw Material cause) - இந்த காரணமான மூலப் பொருளாவது காரிய பொருளாக மாறுகிறது.

*__நிமித்த காரணம்__* : நிபுணர் (Expert Cause) - மூலப் பொருளை காரிய பொருளாக மாற்ற ஒரு நிபுணரின் தேவை ஏற்படுகிறது.

*__ஸஹகாரி காரணம்__* : ஆதரவு (Support Cause) - மூலப் பொருளை காரிய பொருளாக மாற்ற ஒரு கருவி தேவையாகிறது.

உதாரணமாக,

ஒரு பானை இருந்தால் அது உண்டாவதற்கு மண் என்று ஒரு வஸ்து இருக்க வேண்டும்.

மண்தான் பானைக்கு உபாதான காரணம்.

ஆனால் மண் எப்படிப் பானையாக ஆகும்?

தானே அது ஒன்று சேர்ந்து பானையாகுமா?

குயவன்தான் மண்ணைப் பானையாகப் பண்ண வேண்டியிருக்கிறது.

மண்ணினால் ஒரு பானை உண்டாக வேண்டுமானால் அதற்குக் குயவன் என்ற காரணமும் வேண்டியிருக்கிறது.

குயவன்தான் நிமித்த காரணம்.

குடத்தை, மண்ணை வைத்துச் சுழற்ற ஒரு சக்கரமும், அதைச் சுற்றிவிட நீண்ட கொம்பும் தேவை. இந்த கருவி தான் உதவுகின்ற காரணங்கள்;

அந்த கருவி ஸஹகாரி காரணம்.

# இந்த ப்ரபஞ்ச உற்பத்திக்கு, ப்ரஹ்மமேதான் (ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனே), உபாதான, நிமித்த, ஸஹகாரி காரணங்களாக இருக்கிறான்.

ப்ரஹ்மத்தின் சரீரமாக இருக்கும் சேதநம் மற்றும் அசேதநம், அதாவது மூலப் ப்ரக்ருதி மற்றும் சம்சாரி சேதநர்கள், இவ்வுலகமாகவும் ப்ராக்ருத சரீர சம்பந்ததோடு கூடிய சேதநர்களாகவும் விரிவடைகிறது.

அந்த ப்ருஹ்மமே ஜகத் ஸ்ருஷ்டிக்கு காரணமாகிறது.

ஆகையால், *__ப்ரஹ்மமேதான் உபாதான காரணம்__*

இதனால் அறிய வேண்டுவதாவது, ப்ருஹ்மத்தின் ஸ்வரூபத்தில், ஸ்ருஷ்டி தசையில் மாறுதல் ஏற்படாது;

விசிஷ்ட ப்ருஹ்மமான, அதாவது சேதந அசேதநங்களை தனக்கு சரீரமாக க் கொண்ட ப்ருஹ்மம், மாறுதலை அடைகிறது.

அதாவது, ஸூக்ஷ்ம சேதந அசேனங்களை தனக்கு சரீரமாகக் கொண்ட ப்ருஹ்மம், ஸ்தூல சேதந அசேனங்களை தனக்கு சரீரமாகக் கொண்ட ப்ருஹ்மம் ஆகிறது.

இவ்வுலகத்தைப் படைக்க வேண்டும் என்று பகவான்தான் உறுதி கொள்கிறார். அந்த ஸங்கல்பமே ஜகத் ஸ்ருஷ்டிக்கு காரணமாகிறது.

ஆக, ***அவனே நிமித்த காரணம்***

பெருமானுடைய சிறந்த பண்புகளைக் கொண்டுதான் (சக்திகளைக் கொண்டுதான்), இவ்வுலகை சிருஷ்டிக்க முடிகிறது.

ஆக, ***பகவானேதான் ஸஹகாரி காரணம்***

# ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டி லய விஷயத்தை, கண்ணன் பகவத் கீதையில் (9-7) விளக்குகிறான் :

***ஸர்வ பூதாநி கௌந்தேய ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம் கல்பக்ஷயே புநஸ்தாநி கல்பாதௌ விஸ்ருஜாமி அஹம்***

அதாவது,

குந்தி மகனே, கல்ப முடிவில் உண்டான அசேதன வஸ்துக்கள் அனைத்தும் எனதான மூல ப்ருக்ருதியில் லயிக்கின்றன மறுபடி ஸ்ருஷ்டி துவக்கத்தில் அவற்றை மீண்டும் நான் படைக்கிறேன்.

ஸர்வ வித ஜகத் காரணன் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனே என்பது ப்ரமாண ஸித்தம்.

2. தைத்ரீய உபநிஷத் ஸ்ருஷ்டியை வர்ணிக்கிறது:

***….ஆகாசாத் வாயுஹு வாயோர் அக்னிஹி அக்னேராபஹ அத்யஹ ப்ருத்விஹி ப்ருத்வியா ஓஷதயஹ ஓஷதீப்யோ அன்னம் அன்னாத் புருஷஹ …***

என்று ஸ்ருஷ்டியை வர்ணிக்கிறது. பராசர மஹரிஷி விஷ்ணு புராணத்தில் இதை விவரிக்கிறார்,

# ஸ்ருஷ்டி தொடக்கத்திற்கு முன், சம்சாரி ஜீவர்கள் ஞானம் அதி ஸங்குசிதமாக (குறைவாக) மூலப்ரக்ருதியோடு இணைந்து எம்பெருமானோடு 'விசிஷ்ட ப்ருஹ்மமாக' இருக்கிறது.

# தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையால், எம்பெருமான் இந்த ஜீவர்களுக்கு, அவர்களுடைய கர்மானுகுணமாக சரீர இந்த்ரியங்களைக் கொடுத்து, சாஸ்த்திரத்தைக் கொடுத்து, அதை ப்ரவர்த்திக்க ஆசார்யர்களைக் கொடுத்து, இந்த ஜீவர்களின் உஜ்ஜீவனத்திற்கு வழி வகுக்க ஸங்கல்பிக்கிறான்.

# மஹா ப்ரளயத்திற்கு பிறகு வரும் ஸ்ருஷ்டி தொடக்கத்தில் அசேதனமான மூலப் ப்ரக்ருதியைக் கொண்டு ஸர்வேஸ்வரன் சமஷ்டி ஸ்ருஷ்டியை ஆரம்பிக்கிறான். அசேதனமான மூலப் ப்ரக்ருதி 24 அசேதன தத்வங்களாக மாறுகிறது.

24 அசேதன தத்வங்களாவது - மூல ப்ரக்ருதி, மஹான், அஹங்காரம், பஞ்ச பூதங்கள், பஞ்ச தன் மாத்ரைகள், பஞ்ச ஞான இந்த்ரியங்கள், பஞ்ச கர்ம இந்த்ரியங்கள் மற்றும் மனஸ்.

அதாவது, நித்யமான அசேதன மூல ப்ரக்ருதியின் ஒரு பங்கு மஹான் என்கிற அசேதன பொருளாகிறது; அந்த மஹான் என்கிற அசேதன பொருளின் ஒரு பங்கு அஹங்காரம் என்கிற அசேதன பொருளாகிறது… இவ்வாறு சமஷ்டி ஸ்ருஷ்டி தொடங்கி மூல ப்ரக்ருதி என்கிற அசேதன தத்வம், 24 அசேதன தத்வங்களாக மாறுகின்றன.

இதில் மூல ப்ரக்ருதி நித்யமாய் இருப்பது ஆகும்;

அந்த மூல ப்ரக்ருதியை கொண்டு மற்ற அசேதன வஸ்துக்கள் உருவாகின்றன.

மேலும் சமஷ்டி ஸருஷ்டியில் ஸகல அண்டங்களும் படைக்கப் பட்டு ப்ரும்மாவும் படைக்க பெறுகிறான்.

சமஷ்டி ஸ்ருஷ்டியில் முதல் சம்சாரி ஜீவரின் படைப்பாக சதுர் முக ப்ருஹ்மாவை ஶ்ரீமந் நாராயணன் படைக்கிறான்.

# அதன் பிறகு, சேதன தத்வமாயும் நித்யமாயும் உள்ள ஜீவர்களுக்கு இந்த அசேதன வஸ்துக்களை, அவரவர்களுக்கு உண்டான கர்மாக்களுக்கு ஏற்ப  சரீரமாக்கி, ப்ராக்ருத உலகங்கள் படைக்க படுகின்றன.

சதுர்முகனால் படைக்கப்படும் இது வ்யஷ்டி ஸ்ருஷ்டி ஆகும்.

இந்த வ்யஷ்டி ஸ்ருஷ்டிக்கு தேவையான நான்கு வேதங்களையும் சதுர்முகனுக்கு உபதேசித்து, ஸர்வேஸ்வரனின் தன் முதல் படைப்பாகிய சதுர்முகனைக் கொண்டு வ்யஷ்டி ஸருஷ்டியைச் செய்கிறான்.

அந்த படைப்புகள் தேவன், மனுஷ்யன், த்ரியக் ( மிருகம், பறவை போன்றன) மற்றும் தாவரங்கள் ஆக உள்ளன.

# ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் என்ற மூன்று குணங்களை கொண்டவை இந்த அசேதன தத்வங்கள். ஆதலால், இப்படி படைக்கப் பட்ட உலகங்கள் ( ப்ரும்மா இருக்கும் ஸத்ய லோகம் உள்பட), மற்றும் அவைகளில் உள்ள அனைத்து பொருட்களும் (நம் சரீரம் உள்பட) மூன்று குணங்களால் ஆனவை.

இவ்வாறு சமஷ்டி மற்றும் வ்யஷ்டி ஸ்ருஷ்டிகள் தொடங்குகின்றன.

3. பகவத் அதீனத்தில் உள்ள ப்ரக்ருதியின் பரிணாமமான, சம்சாரி ஜீவர்களின் சரீரம், வ்யஷ்டி ஸ்ருஷ்டி காலத்தில், ஸத்வம் ரஜஸ் தமஸ் ஆகிய குணங்களால் உந்தப் பட்டு விவேகமற்ற செயல்களிர் ஈடுபடச் செய்கிறது :

# ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில், (9-10)

***மயா அத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம் ஹேதுநா அநேந கௌந்தேய ஜகத் விபரிவர்த்ததே***

என அருளினான்.

அதாவது,

ஸத்ய ஸங்கல்பனான நான், என் அதீனத்தில் ப்ரக்ருதி பரிணானமான ப்ரபஞ்சம், உண்டாகக் கடாக்ஷிக்கிறேன் ; அவரவர்களுக்கும், கர்ம அதீனமாக பெறும் தேவ-மனுஷ்ய-திரியக்-தாவர சரீரங்கள், என்னால் அளிக்கப் படுகிறது ; குந்தி மகனே, இந்த ஹேதுவால் உலகமே சுழல்கிறது.

# இந்த சம்சாரி ஜீவர்களின், உண்மை நிலையை, பராசர மஹரிஷி,

***பூமான்ன தேவொந நரோ ந பஶுர்  நச பாதப: சரீர ஆக்ருதி பேதாஸ்து பூபைதே கர்ம யோனய:***

அருளினார்.

அதாவது,

இந்த ஜீவர்கள், தேவன் அல்லன், மனுயன் அல்லன், த்ரியக் (மிருகம்,பறவை போன்றவை) அல்லன், தாவர்கள் அல்லன். ஆனால், இந்த சம்சாரி ஜீவர்களுக்கு ஏற்படும் முக்குணங்களாலான சரீர சம்பந்தம் சரீர சம்பந்தம் கொண்டு தன்னை அதுவாக நினைத்து ப்ரமிக்கிறான்.

சரீரத்தில் இருக்கும் இந்த மூன்று குணங்களும், ஒரே அளவில் இருக்காது. அதனால், அந்தந்த குணங்களின் வெளிப்பாடு வெவ்வேறு காலங்களில் தெரிய வரும். எண்ணங்களையும் செயல்களையும் கொண்டு எந்த குணத்தின் ஆதிக்கம் அந்த காலத்தில் அதிகமாக இருக்கிறது என உணரலாம்.

# ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில், (3-27)

*__ப்ரக்ருதே: க்ரியமாணாநி குணை: கர்மாணி ஸர்வஸ: அஹங்காரவிமூடாத்மா கர்தாஹமிதி மந்யதே__*

என அருளினான்.

அதாவது,

சம்சாரி ஜீவர்களின் சரீரமானது மூன்று குணங்களாகிய ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் உடைய ப்ரக்ருதி என்ற அசேதந தத்வத்தினால் ஆனது. ஆக, சம்சாரி ஜீவர்களின் எண்ணமும் செயல்களும், அந்த குணத்திற்கு ஏற்ப அமைகிறது.

# ஸகல உபநிஷத் ஸாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில் (7-14)

*__தைவி ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்ய்யா. மாமேவயே ப்ரபத்யந்தயே மாயாமேதாம் தரந்திதே__*

‘என்னுடைய முக்குணங்களாலான ப்ரக்ருதி என்னும் மாயையை கடப்பதற்கு என்னையே சரண் அடைய வேண்டும்’ என சொல்லப் பட்டிருக்கிறது.

ஆக, த்ரிகுண மூல ப்ரக்ருதி பரிசாமம், சம்சாரி ஜீவர்களின் சரீரம் ; அந்த மூல ப்ரக்ருதி சம்பந்தத்தினால், ஜீவர்களின் ஸ்வாபாவிக நிலையானது மாறுதல்களை அடைகிறது.

4. பொதுவாக, *__தத் ப்ரயுக்த தோஷம்__* (ஒன்றின் சம்பந்தத்தினால் ஏற்படும் தோஷம் என பொருளாகிறது) எப்படி ஏற்படுகிறது என ஒரு உலக உதாரணம் கொண்டும் தெளியலாம். ஸ்வாமி தேசிகன் *__உபோத்காத அதிகாரத்தில்__* தெளிவித்திருக்கிறார்.

*__மாதாப்யேகா பிதாப்யேகொ மம தஸ்ய ச பக்ஷிணஹ.அஹம் முனிபிரானிதஹ ஸ சானிதெள கவாஷனைஹி. அஹம் முனினாம் வசனம் ஸ்ருணோமி. கவாஷனானம் ஸ வசஸ் ஸ்ருணோதி. ப்ரத்யக்ஷதாம் ஏதத் பவதாபி த்ருஷ்டம் ஸம்ஸர்கஜா தோஷ குணா பவந்தி__*

அதாவது,

ஒரு ரிஷி வீதி வழி சென்றுக் கொண்டிருந்தார்; அவர் வழியில் ஒரு கசாப் கடை இருந்தது; அங்கு அமர்ந்திருந்த கிளி, ‘வெட்டுவேன்’ ‘கொல்வேன்’ என்று உச்சரித்த வண்ணம் இருந்தது; சிறிது தொலைவில் அந்த ரிஷி, ஒரு முனிவரின் ஆஸ்ரமம் வந்தடைந்தார். அங்கு இருந்த கிளி, ‘வணக்கம்’ ‘ஆசனத்தில் அமருங்கள்’ என்று உச்சரித்த வண்ணம் இருந்தது.

இரண்டுமே கிளி இனத்தை சேர்ந்திருந்தாலும், எவ்வளவு வித்யாசம் தென் படுகிறது; அந்த ரிஷிக்கு ஒரே ஆச்சர்யம்.

இரண்டு கிளிகளின் பேச்சைக் கேட்ட அந்த ரிஷியிடம், ஆஸ்ரமத்தில் வளர்ந்த கிளி சொன்னது :

‘எனக்கும் இன்னொரு கிளிக்கும் தாயும் ஒருத்தி; தகப்பனும் ஒருவனே !

நான், ஆஸ்ரமவாசிகளான ரிஷிகளால், வளர்ப்பப் பட்டேன்; இன்னொரு கிளி பசுமாம்ஸம் தின்பவர்களால் வளர்க்கப்பட்டது.

நான், தினந்தோறும் முனிவர்களின் பேச்சுக்களைக் கேட்கிறேன்; அந்தக் கிளியோ மாட்டிறைச்சி உண்பவர்களின் பேச்சுக்களைக் கேட்கிறது.

நான் பேசும் பேச்சுக்களின் தன்மையையும், அந்தக்கிளி பேசும் பேச்சுக்களின் தன்மையையும் கேட்டு, இவற்றிலுள்ள வேறுபாட்டை நீ தெரிந்துகொண்டு இருக்கலாம்.

இவற்றிலிருந்து, குணங்களும் குற்றங்களும், நல்ல பண்புகளும் தீய பண்புகளும் , சேர்க்கையால் ஏற்படுகின்றன' ( ***ஸம்ஸர்கஜா தோஷ குணா பவந்தி*** என்றபடி)

என்று சொல்லிற்று.

இதனால் தெளிய வேண்டுவது, த்ரிகுண ப்ரக்ருதி பரிணாமமான சரீர சம்பந்தத்தினால், சம்சாரி ஜீவர்களுக்கு, ***தத் ப்ரயுக்த தோஷத்தினால்*** சம்சார பந்தம் நீடிக்கிறது.

4. ஆக, ***சரீர சரீரி சம்பந்தத்தில் சரீரத்தை உபாதானமாகுமோ*** என்கிற கேள்விக்கு காரணம், மூல ப்ரக்ருதி பரிணாமமான சரீரமும் விகாரத்தை அடைகிறது, என்பதால் ;

ஜீவாத்மாவுக்கு பிறப்பு இறப்பு இல்லை என்றால், அவன் பிறந்தான், இறந்தான் போன்ற பத ப்ரயோகங்கள் எப்படி ஸங்கதமாகும் ? அதாவது, ஜீவனுக்கு, கர்ம அநுகுணமான சரீர சேர்க்கையை பிறவி என்றும், சரீர இழப்பை மரணம் என்றும் வ்யவஹரிக்கப் படுகிறது ; அதனால், ஜீவர்களுக்கு உள்ள, கர்ம அநுகுணமான சரீர சேர்க்கையில், பால்யம், கௌமாரம், மூப்பு ஆகியவை ஸித்திக்கும் போது, பால்யம் இழந்து கௌமாரத்தை பெறுவதில் யாரும் கலக்கம் கொள்ளாதிருக்கிறபடி, விஷய ஞானம் உடைய தீரன், ஒரு சரீரத்தைத் துறந்து மற்றொரு சரீரத்தை பெறும் ஜீவர்களுக்காகறவும் கலங்க மாட்டான், என கண்ணன் பகவத் கீதையில் (2-13) அருளிச் செய்தான் :

***தேஹிந: அஸ்மிந் யதா தேஹே கௌமாரம் யௌவநம் ஜரா ததா தேஹாந்தர ப்ராப்தி தீர தத்ர ந முஹ்யதி***

அதாவது,

ஆத்மாவுக்கு அவன் சரீரத்தில் எப்படி பிள்ளைப் பிராயமும் இளமையும், மூப்பும் தோன்றுகின்றனவோ அப்படியே மற்றொரு சரீரப் பிறப்பும் தோன்றுகிறது. தீரன் அதில் கலங்கமாட்டான்.

ஆக, சம்சாரி ஜீவனின் இருப்பு, ப்ராக்ருத சரீர மாறுதல்களுக்கு ஹேதுவாகிறது ; அதனல், ***சரீர சரீரி சம்பந்தத்தில் சரீரத்தை உபாதானமாகுமோ*** என்கிற கேள்வி உதிக்கிறது ; அதாவது, சரீரம் மாறுதலை அடையும் போது, முந்தய ஆகாரம் இந்த புதிய ஆகாரத்துக்கு உபாதானமோ என்னில், இந்த விளக்கம் அநுபபன்னம்.

# ஒரு வஸ்து மற்றொன்றாக, ***நாம ரூபத்தால்*** மாறுதல்களை அடையும் போது, அதனை உற்பத்தி என அறுதியிட்டு, அதன் உபாதான காரணத்தை வ்யவஹரிக்கிறோம் ; உதாரணமாக, ஸ்ருஷ்டி துவக்க காலத்தில், பகவத் ஸங்கல்பத்தினால், ப்ரபஞ்சம் உருவாகிறது. சாந்தோக்ய உபநிஷத், இதனை,

***தத்ஜக்ஷத பஹுஸ்யாம்*** (நான் பலவாக மாறுவேன் என்று ஸங்கல்பம் கொள்கிறான்)

என்றும்,

***அநேந ஜீவேந ஆத்மனா அநு பிரவிஸ்ய நாம ரூபா வ்யாகரவாணி*** (ஸர்வ அந்தர்யாமியான நான் மாறுபட்ட ***உருவ பெயர்களைக்*** கொண்டு வஸ்துக்களை ஸ்ருஷ்டிக்கிறேன - அதாவது, மஹத் தொடங்கி ப்ரஹ்மாண்டம் வரை ப்ரஜாபதியையும் அவன் சேர்த்தே ஸ்ருஷ்டிக்கிறான்)

என்றும், தான் தன்னை கார்ய வஸ்துக்களாக மாற்ற நினைப்பதால், இந்த ப்ரபஞ்சம் உருவாகிறது, என்றபடி.

ஆனால், பத்த சேதநனின் சரீரமானது, ரூபத்தில் மாறுதல்களை அடையப் பெற்றாலும், அது அன்னாரின் சரீரம் என்கிற நாமத்தில் மாறுலற்றது ; எனவே, சரீர மாறுதல்களில் உபாதான காரணம் ஸித்திக்காது ; உதாரண ப்ரகரணத்திலும், மண் என்கிற த்ரவ்யம் குடம் என்னும் த்ரவ்ய ஆகாரத்தை அடையும் போது, அதன் உருவமும் பெயரும் மாறுதலை அடைகிறது அன்றோ ! அதனால், மண் என்பது குடத்துக்கு உபாதான காரணமாகிறது ; அது போல ஸூக்ஷ்ம சேதந அசேதந விசிஷ்டனான எம்பெருமான் ஸ்தூல சேதந அசேதந வசிஷ்டனாக பரிணமிக்கும் போது, ப்ரபஞ்சம் என்றும், தேவ-மநுஷ்ய-த்ரியக்-ஸ்தாவரம் என்றும் அடையும் நாம ரூப மாறுதல்களால் உபாதான காரணம், ஜகத் ஸ்ருஷ்டியில், எம்பெருமானுக்கு ஸித்திக்கிறது.

# காலத்தால், ஒரு வஸ்து தன் தன்மையை இழக்கும் போது, அதனை உற்பத்தி என்றும் அதனால் முந்தய நிலை உபாதான வஸ்து என்றும் வ்யவஹரிப்பது பொருந்தாது ; உதாரணமாக, காலம் கடந்த உணவு பொருட்கள், சுவையை இழக்கும் போது, சுவை இழந்த வஸ்துவை உற்பத்தி என்றோ, முந்தய நிலை உபாதான காரணம் என்றோ கூறுவது அநுபபன்னம்.

ஆக, ***சரீர சரீரி சம்பந்தத்தில் சரீரத்தை உபாதானமாகுமோ*** என்னில், ஆகாது.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

******

16.7.2023
ஞாயிறு கிழமை

***விகாரி த்ரவ்யத்தில் விகாரமற்ற அத்ரவ்ய தர்மத்தின் மாறாட்டம் - விளக்கம் - விவாத மேடை விஷயம் - ஒலி நாடா***

1. சேதந, அசேதந, ஈஸ்வர தத்வத்ரயத்தில்,

***த்ரவ்யம்*** (ஒரு வஸ்து) மற்றும்

***அத்ரவ்யம்*** (ஒரு த்ரவ்யத்தை சார்ந்தே இருக்கக் கூடியது)

என்று விளக்கப் படுகின்றன.

# ***த்ரவ்ய லக்ஷணம் இரு வகை*** : ஸ்வரூப நிரூபக தர்மங்களால் அறியப் படுகிற ஒரு பொருளாய் இருப்பது மற்றும் தன் தன்மைகளில் மாறுதல்களை அடைவது ; உதாரணம்

சேதந, ஈஸ்வர தத்வ த்ரவ்யம் மற்றும்

அசேதந த்ரவ்யமான மூல ப்ரக்ருதி (லீலா விபூதி) மற்றும் சுத்த ஸத்வம் (நித்ய விபூதி),

மாறுதல்களுக்கு உட்படும் அசேதந த்ரவ்யமான காலம் (பூத, வர்த்தமான, பவிஷ்ய) மற்றும் தர்ம பூத ஞானம் (ஸுகம், துக்கம், ஸங்கல்பம் போன்றவை)

# *அத்ரவ்யம்* - ஒரு த்ரவ்யத்தை சார்ந்தே இருக்கக் கூடியது - உதாரணம் : குணம், மணம், நிறம், செயல் (க்ரியை) போன்றவைகள் ; உதாரணமாக,

ஸ்வாமி தேசிகன் *ஸித்தோபாய சோதன அதிகாரத்தில்* ,

***நிஷ்க்ருபனுடைய ஸ்வாதந்த்ரியம் பாதகம்; அஸ்வதந்த்ரனுடைய காருண்யம் பரர்க்கும் அநுபகாரமாய் தனக்கும் க்லேசாவகமாய் இருக்கும் ; ஸ்வதந்த்ரனுடைய காருண்யம் நினைத்தது முடிக்கையாலே தனக்கும் அதிரஸமாய் ஆஸ்ரயிப்பார்க்கெல்லாம் அன்றே அநிஷ்ட நிவ்ருத்திக்கும் இஷ்ட ப்ராப்திக்கும் உடலாய் இருக்கும்***

என அருளியுள்ளார். இதன் பொருளாவது: கருணை இல்லாதவனுடைய ஸர்வ சுதந்திரம் தீங்கை உண்டு பண்ணும் ; அதாவது, *ஸௌலப்யம்* அற்ற *பரத்வம்* கேடு விளைவிக்க காரணமாகும் ; சுதந்திரம் அற்றவனுடைய கருணை மற்றவருக்கும் உதவி அற்றதுவுமாய், தனக்கும் மன வருத்தத்திற்கு காரணமாக இருந்து போகும் ; அதாவது, *பரத்வம்* அற்ற *ஸௌலப்யம்* மற்றவருக்கும் உதவி அற்றதுவுமாய், தனக்கும் மன வருத்தத்திற்கு காரணமாக இருந்து போகும் ; கருணையோடு கூடின ஸர்வ சுதந்திரம் தனக்கு சந்தோஷிக்கத் தக்கதாயும் ; அதாவது, *பரத்வம்* மற்றும் *ஸௌலப்யம்* இரண்டும் சேர்ந்து இருக்குமாகில், அது தனக்கு சந்தோஷிக்கத் தக்கதாக இருக்கும் ; மற்றவருக்கும் உதவி பெறக் கூடிய வகையிலும் அமையும்.

அதானல், *பரத்வம்* மற்றும் *ஸௌலப்யம்* போன்ற அசேதந அத்ரவ்ய தன்மைகள், ஒரு சேதநனைச் சார்ந்து இருக்கும்.

2. அசேதந த்ரவ்யத்தில், அசேதந அத்ரவ்ய குணங்களை *த்ரிகுண மூல ப்ரக்ருதியை* உதாரணமாக்கி தெளியலாம் :

# ப்ரக்ருதியின் தன்மையை கண்ணன் கீதையில் (14-5)

***ஸத்த்வம் ரஜஸ்தம இதி குணா: ப்ரக்ருதி ஸம்பவா: நிபத்நந்தி மஹாபாஹோ தேஹே தேஹிநமவ்யயம்***

என அருளினான் ; அதாவது, ப்ரக்ருதியில் ஒன்றோடு ஒன்று சேர்ந்திருக்கும், ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற இந்த குணங்கள், இயற்கையில் மாறுதல்களளற்ற ஆத்மாவை, ப்ரக்ருதி பரிணாமமான உடம்பில் கொண்டு இருக்கும் காரணத்தினாலேயே சம்சாரத்தில் பிணைக்கின்றன. இதன் தாத்பர்யமாவது, லீலா விபூதியில் இருக்கும் ஜீவாத்மாக்கள், ப்ரக்ருதியால் உண்டாக்கப் பட்ட முக்குணங்களாலான ( அதாவது ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ்), சரீரத்தை உடையவர்கள். அதனால் நல்ல குணங்களும் கெட்ட குணங்களும் சேர்ந்தே இருக்க் கூடியவர்கள். அவர்களின் குணங்களும் செயல்களும் அவர்களுடைய பாப புண்ய கர்மாக்களின் ஆதிக்கத்தில் உள்ளன.

# கண்ணன் கீதையில் (17-2)

***ஸ்ரீபகவாநுவாச : த்ரிவிதா பவதி ஸ்ரத்தா தேஹிநாம் ஸா ஸ்வபாவஜா ஸாத்த்விகீ ராஜஸீ சைவ தாமஸீ சேதி தாம் ஸ்ருணு***

என அருளினான் ; அதாவது, ஶ்ரீ பகவான் சொல்லுகிறான்: ஜீவர்களிடம் தேஹ சம்பந்தத்தினால் உண்டான அந்த ஸ்ரத்தை மூன்று வகையாக இருக்கிறது ; ஸாத்விக ஸ்ரத்தை, ராஜஸ ஸ்ரத்தை, தாமஸ ஸ்ரத்தை என ; அதைக் கேள் ; விவரமாகக் கூறுகிறேன்.

# கண்ணன் கீதையில் (3-27)

*ப்ரக்ருதே: க்ரியமாணாநி குணை: கர்மாணி ஸர்வஸ: அஹங்காரவிமூடாத்மா கர்தாஹமிதி மந்யதே*

என, எங்கும் செயல்கள் மூல ப்ரக்ருதியின் ஸத்வ ரஜஸ் தமஸ் ஆகிய குணங்களால் செய்யப்படுகின்றன. தேஹாத்ம ப்ரமத்தால் தன் ஸ்வரூபம் உணராது மயங்கியவன், “நான் செய்கிறேன்” என்று நினைக்கிறான், என்கிறான் கண்ணன்.

# ஜகத் ஸ்ருஷ்டிக்கு முல ப்ரக்ருதியும் காரணமான போது, ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனே ப்ரதான காரணமாகிறான் என்பது உணரத் தக்கது ; கண்ணன் கீதையில் (9-10)

*மயா அத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம் ஹேதுநா அநேந கௌந்தேய ஜகத் விபரிவர்ததே*

என, என் மேற்பார்வையில் செயற் படும் மூல ப்ரக்ருதியானது அசைவன, அசையாதன எல்லாம் உள்ள உலகை தோற்றுவிக்கிறது. எனது ஸங்கல்பம் என்கிற இந்த காரணத்தால் உலகமே மாறுதல்களை அடைகிறது, என்கிறான் கண்ணன்.

ஆக, பரம சேதநனான எம்பெருமான் அதீனத்தில் உள்ள அசேதந த்ரவ்யமான ப்ரக்ருதி, தனக்கு குணமாக அசேதந அத்ரவ்யங்களான ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் ஆகியவற்றைக் கொண்டுள்ளது ; சம்சாரி ஜீவர்களுக்கு ப்ரக்ருதி சம்பந்தம், அவர்களின் சரீரமாக, உண்டாகும் போது, இந்த குணங்கள் அந்த சேதநர்களுக்கு விபரீத ஞான ஹேதுவாகிறது.

3. ஆக, அசேதந விகாரி த்ரவ்யமான த்ரிகுண மூல ப்ரக்ருதியின் பரிணாமமே சம்சாரி ஜீவர்களின் சரீரம் ; அந்த மூல ப்ரக்ருதியின் அத்ரவ்யமான த்ரி குணங்களே ஸத்வம் ரஜஸ் மற்றும் தமஸ் :

# பராசர மஹரிஷி, இந்த சம்சாரி ஜீவர்களின், உண்மை நிலையை, விளக்கி அருளினார் ; அதாவது,

*பூமான்ன தேவொந நரோ ந பஷூர்  நச பாதப:. சரீர ஆக்ருதி பேதாஸ்து பூபைதே கர்ம யோனய:*

என அருளினார். இந்த ஜீவர்கள், தேவன் அல்லன், மனுஷ்யன் அல்லன், த்ரியக் (மிருகம்,பறவை போன்றவை) அல்லன், தாவர்கள் அல்லன். ஆனால், இந்த சம்சாரி ஜீவர்களுக்கு ஏற்படும் சரீர சம்பந்தம் கொண்டு தன்னை அதுவாக நினைத்து ப்ரமிக்கிறான்.

# கர்ம அநுகுணமாக, சம்சாரி ஜீவர்களின் உடலில், த்ரிகுணங்களின் சத விஹிதம் நிச்சயிக்கப் படுகிறது ; இருப்பினும், ஸத்வ குணத்தை வளர்க்க, சாந்தோக்ய உபநிஷத்,

*ஆஹார சுத்தௌ ஸத்வசுத்தி: ஸத்வ சுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி:*

என்கிறது;

அதாவது – உணவு சுத்தமாக இருந்தால் மனம் சுத்தமாகும்; மனம் தூய்மையானால், சாஸ்த்திர விஹித எண்ணங்களும் செயல்களும் கைகூடும். ஆகாரத்தில் நியமங்கள் சாஸ்த்திரங்கள் கூறுகின்றன : சாஸ்திரங்கள் 3 வகையான தோஷமுள்ள ஆகாரங்களை தவிர்க்க சொல்கிறது.

அவை *ஜாதி தோஷம்* , *ஆஸ்ரய தோஷம்* மற்றும் *நிமித்த தோஷம்*.

*ஜாதி தோஷம்* : பிறப்பிலேயே தோஷம் உள்ள ஆகாரங்கள். உதாரணம்: வெங்காயம் போன்றவைகள்

*ஆஸ்ரய தோஷம்* : சாஸ்த்திரத்தால் அங்கீகரிக்கப் படாத பாத்திரங்களில் உள்ள ஆகாரம்

*நிமித்த தோஷம்* : நகம், முடி கலந்த உணவுகள் போன்றவைகள்.

த்ரவ்யத்தையே சார்ந்து இருக்கும் குணம் மாறுவது கூடுமோ ? அதாவது, விகாரி அத்ரவ்யம் ஸாத்யமா ?

4. அத்ரவ்ய குணத்தை மாறுதலுக்கு உட்பட்டு விளக்கும் போது, தாத்பர்யத்தை உணர வேண்டும் ; உலக உதாரணத்தால் உணரலாம்.

மலரின் மணம் என்னும் போது - மலரானது த்ரவ்யம் ; மணமானது அத்ரவ்யம்.

அத்ரவ்ய மணத்தின் மாறுபாடு, த்ரவ்யமான மலரின் மாறுபாட்டால் உண்டாவது ; ஆக, அத்ரவ்யத்தின் மாறுபாட்டை கூறும் போது, அது ஆஸ்ரயித்து இருக்கிற த்ரவ்யமான மலரின் மாறுபாட்டை விளக்குவதாகும்.

அது போல, தளிகையில் அத்ரவ்ய குணமான புளிப்பு அதிகம் என்றால், அது த்ரவ்யமான புளி சம்பந்தம் அதிகம் என்பதில் தாத்பர்யம்.

# மூல ப்ரக்ருதி பரிணாமமான, மனுஷ்ய தேஹம் வளரும் தன்மை கொண்டது என்பது ப்ரத்யக்ஷ ஸித்தம் ; இதனைக் கண்ணன் பகவத் கீதையில் (2-13)

*தேஹிந: அஸ்மிந் யதா தேஹே கௌமாரம் யௌவநம் ஜரா ததா தேஹாந்தர ப்ராப்தி தீர தத்ர ந முஹ்யதி*

என அருளான் ; அதாவது, ஆத்மாவுக்கு அவன் சரீரத்தில் எப்படி பிள்ளைப் பிராயமும் இளமையும், மூப்பும் தோன்றுகின்றனவோ அப்படியே மற்றொரு சரீரப் பிறப்பும் தோன்றுகிறது. தீரன் அதில் கலங்கமாட்டான்.

# மேலும், இதனைக் கண்ணன் பகவத் கீதையில் (2-18)

*அந்தவந்த இமே தேஹா நித்யஸ்யோக்தா: ஸரீரிண: அநாஸிந: அப்ரமேயஸ்ய தஸ்மாத் யுத்யஸ்வ பாரத*

என அருளான் ; அதாவது, ஆத்மா நித்தியன்; அழிவற்றான். எனினும் அவனுடைய சரீரம் வளர்ந்து அழிவு உடையன என்பர். ஆதலால் பாரதா, போர் செய். இதில் தெளிய வேண்டுவது, *ஸரீரிண: இமே தேஹா* என்பதாவது, வளரக் கூடியது என்பதால், உடலை *தேஹம்* என்கின்றனர் ; உடல் அழியத்தக்கது ஆதலால், இது *சரீரம்* எனப்படுகிறது.

# இந்த சரீர வளர்ச்சிக்கு காரணம் ஆகாரம் ; மனுஷ்யர்கள் உட் கொள்ளும் ஆகாரமும் ப்ரக்ருதி பரிணாமமானதே ; அந்த ஆகாரத்தில், உந்த குணம் உள்ளதோ அது சரீரத்தில் ஏற்பட்டு, அதனால் *தத் ப்ரயுக்த தோஷத்துக்கு* காரணமாகிறது.

*தத் ப்ரயுக்த தோஷமாவது* - அவற்றின் சம்பந்தத்தினால் ஏற்படும் தோஷம் என பொருளாகிறது. சேர்க்கையினால் ஏற்படும் தோஷமாவது, பொதுவாக சம்சாரி ஜீவர்களுக்கு, *ப்ரக்ருதி சம்பந்தம்* என்கிற முக்குணங்களாலான சரீர சம்பந்தத்தினால், ஏற்படுகிறது.

5. ஆக, உடல் வளர்ச்சிக்கு ஆகாரம் தேவை ; அந்த ஆகாரம், ப்ரக்ருதி பரிணாமமானது ; அந்த ஆகாரத்தில் உள்ள குணங்கள், மனுஷ்ய தேஹத்தை சென்றடைகிறது ; அதன் காரணமாக மனுஷ்ய குணங்கள் மாறுபடுகின்றன ; த்ரவ்யமான ஆகாரமே குண மாற்றத்துக்கு காரணமே அன்றி, அத்ரவ்ய குணங்கள், த்ரவ்யம் போல மாறுதல்களை அடைவதில்லை ; இதனை கண்ணன் பகவத் கீதையில் விவரிக்கிறான் :

# பகவத் கீதை (17 - 8 )

*ஆயு: ஸத்த்வ பல ஆரோக்ய ஸுக ப்ரீதி விவர்தநா: ரஸ்யா: ஸ்நிக்தா: ஸ்திரா ஹ்ருத்யா ஆஹாரா: ஸாத்த்விகப்ரியா:*

அதாவது, இனிப்புகள், பசுமையானவைகள், சமைத்த பிறகு வெகு காலம் ஆகாத உணவு, ஆகாரம் உட்கொள்ளும் இடத்தின் சுத்தம், ஸர்வேஸ்வரனுக்கு நிவேதிக்கப் பட்டவை இவைகளாகும் ஸாத்வீக குணத்தை வளர்க்கும் ஆகாரம் ; சரீரத்தில் இருக்கும் ஸத்வ குணமாவது, நேர்மையையும், நிதானத்தையும், உயர்ந்த விஷயங்களில் மன ஈடுபாடு போன்றவைகளை வளர்க்க கூடியது.

# பகவத் கீதை (17 - 9 )

*கட அமல லவண அத்யுஷ்ண தீக்ஷ்ண ரூக்ஷ விதாஹிந: ஆஹாரா ராஜஸஸ்ய இஷ்டா: து:க ஸோக ஆமயப்ரதா:*

அதாவது, அதிகமான அளவில் கசப்பு, உப்பு, காரம், புளிப்பு போன்றவைககள், அதிக சூடு அல்லது அதிக குளுமையான பதார்த்தங்கள், உலர்ந்தவைகள் இவைகளாகும் ராஜஸ குணத்தை வளர்க்கும் ஆகாரம் ; ராஜஸ குணமாவது உலக விஷயத்தில் ஆசையையும், கோபத்தையும், பகை உணர்வு போன்றவைகளை வளர்க்க கூடியது.

# பகவத் கீதை (17 - 10 )

*யாதயாமம் கதரஸம் பூதி பர்யுஷிதம் ச யத் உச்சிஷ்டம் அபி ச அமேத்யம் போஜநம் தாமஸ ப்ரியம்*

அதாவது, பழைய உணவு, சுவையை இழந்த உணவு, கெட்டுவிட்ட உணவு, மற்றவர்களின் எச்சில் உணவு, ஸர்வேஸ்வரனுக்கு அர்ப்பணிக்காத உணவு இவைகளாகும் தாமஸ குணத்தை வளர்க்கும் ஆகாரம் ; தாமஸ குணமாவது விஷயங்களை அறிவதில் தெளிவின்மையும், செயல்களிலும் கால தாமதத்தை ஏற்படுத்துவதும், முடிவு எடுக்கும் திறன் இன்மை போன்றவைகளை வளர்க்க கூடியது.

ஆக, ***விகாரி த்ரவ்யத்தில் விகாரமற்ற அத்ரவ்ய தர்மத்தினால் மாறாட்டம்*** என்பதாவது, அசேதந த்ரவ்யமான மூல ப்ரக்ருதியைச் சார்ந்து இருக்கும் அத்ரவ்யமான த்ரிகுணங்களுக்கு விகாரமானது, உட்கொள்ளும் த்ரவ்யமான உணவால் மாறுதலால் ஏற்படுமே அன்றி, விகாரி அத்ரவ்யம் ஸாத்யமில்லை.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

******